සෞඛ්‍ය අමාත්‍යාංශය


ශ්‍රී ලංකා ත්‍රිපෝෂ ලිමිටඩ්

ர்றஹஜஹஉ மஇகரஹர்

யதஷஇற ஜபஉபந்கஹஆ றகஷகடப

Ministry of Health

Sri Lanka Thriposha Ltd.





2019





වාර්ෂික වාර්තාව

ஆண்ட றிக்கை

Annual Report

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

வருடாந்த அறிக்கை - 2019

	உள்ளடக்கம்	பக்கம்
01.	எமது தொலைநோக்கு / செயற்பணி	01 - 02
02.	தவிசாளரின் செய்தி	03
03.	பணிப்பாளர் சபை	04
04.	திரிபோஷ கம்பனியின் சுருக்கமான அறிமுகம்	05
05.	கணக்காய்வு, முகாமைத்துவ மற்றும் கொள்வனவுக் குழு	06
06.	திரிபோஷ கம்பனியின் வரலாறும் தற்போதைய முன்னேற்றமும்	07
07.	மனித வளங்கள் பகுப்பாய்வு	08
08.	பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பற்றிய விபரங்கள்	09
09.	உற்பத்தி தகவல்களும் எதிர்பார்க்கப்படும் இலக்குகளும்	10 - 12
10.	திரிபோஷ விநியோக செயற்பாடும் தகவல்களும்	13 - 16
11.	சந்தைப்படுத்தல் பிரிவு	16 - 18
12.	2019 ஆம் ஆண்டினுள் அடைந்த வெற்றிகளும் வெற்றிக்கான முன்மொழிவுகளும்	18
13.	2020 ஆம் ஆண்டுக்கான முன்மொழிவுகள் மற்றும் இறுதி இலக்கு	18 - 20
14.	நன்றி நவிழல்	21
15.	வருடாந்த நிதிக் கூற்று	22 - 54
16.	கணக்காய்வாளரின் அறிக்கை	55 - 61

தொலைநோக்கு

இலங்கைவாழ் மக்களை

போஷாக்குமிக்க, ஆரோக்கியமுள்ள,

சுபீட்சமான மற்றும் அபிமானம்மிக்க

சமூகமொன்றாக உருவாக்குதல்

செயற்பணி

போஷாக்குமிக்க திரிபோஷா மேலதிக உணவை சுகாதார வழிமுறைகளைப் பேணி தயாரித்து இலக்கிடப்பட்ட பயனாளர்களுக்கு இலவசமாக வழங்கி ஆரோக்கியமுள்ள சமூகமொன்றை உருவாக்கும் செயற்பணிக்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் ஒட்டுமொத்த இலங்கைவாழ் மக்களினதும் போஷணை தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு போஷாக்குள்ள மேலதிக உணவை சந்தைக்கு அறிமுகம் செய்வதும் அவ்வாறே இந்த அனைத்து உற்பத்திகளுக்குமான பிரதான மூலப்பொருள் வழங்குநரான உள்நாட்டு விவசாயியை வலுவூட்டுவதும் நோக்கமாகும்.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி தவிசாளரின் ஆசிச்செய்தி



சுகாதார அமைச்சுடன் கூட்டிணைக்கப்பட்டு முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனியொன்றாக 2011 ஆம் ஆண்டில் இலங்கை திரிபோஷா கம்பனி நிறுவப்பட்ட போது போஷாக்கு மிகுந்த ஆரோக்கியமான மக்களை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு திரிபோஷ துணை உணவை உற்பத்தி செய்து மருத்துவ சிகிச்சையின் போது இலங்கை வாழ் சகல கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 05 வயதுக்கு குறைந்த நிறை குறைவாக உள்ள பிள்ளைகளுக்கும் இலவசமாக பகிர்ந்தளிப்பது கம்பனியின் பிரதான நோக்கமாக காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் நான் இலங்கை திரிபோஷா கம்பனியில் கடமைகளைப் பொறுப்பேற்ற நாளில் இருந்து இது வரையில் அந்த இலக்கை அடைய முடிந்துள்ளது.

கம்பனியின் இன்னுமொரு பிரதான நோக்கமாக காணப்பட்டது யாதெனில், சந்தைக்கு வர்த்தக உற்பத்திகளை (Commercial Products) அறிமுகப்படுத்தி அரசாங்கத்தின் உதவியில் தங்கிவாழும் நிறுவனமாக அல்லாது இலாபமீட்டும் அரசாங்க நிறுவனமொன்றாகத் திகழ்வதாகும். சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்ட சுபோஷ உற்பத்தி மூலம் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது அதிக இலாபம் இந்த ஆண்டில் ஈட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க, ஒரு வருட குறுகிய காலப்பகுதியில் இந்த வெற்றியை அடைய முடிந்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அவ்வாறே, திரிபோஷா மாவினைப் பயன்படுத்தி போஷாக்கு நிறைந்த பிஸ்கட் வகையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இலங்கை பூராகவும் விநியோக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளல், ஊழியர் நலன்கருதி சுகாதாரக் காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பித்தல், நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகளாகும்.

இதற்காக எம்மை ஊக்கப்படுத்திய அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள், கௌரவ சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மருத்துவர் ராஜித்த சேனாரத்ன அவர்கள், பிரதி அமைச்சர் பைசல் காசிம் அவர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. வசந்தா பெரேரா அவர்கள், நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுத் திறைசேரியின் செயலாளர் கலாநிதி. திரு. எச்.எஸ். சமரதுங்க அவர்கள் எமது பணிப்பாளர் சபை உட்பட சகல ஆளணியினர் மற்றும் தொடர்ந்தேர்ச்சியான உற்பத்திற்கு உரிய நேரத்தில் மூலப்பொருட்களை வழங்குகின்ற எனது வழங்குநர்கள் மற்றும் எமக்கு பலவிதத்திலும் உதவி புரிந்த அனைவரையும் நன்றியுணர்வுடன் ஞாபகப்படுத்துகின்றேன்.

பீ.ஜீ.எஸ். குணதிலக்க
தவிசாளர்
இலங்கை திரிபோஷா கம்பனி

2019/12/02

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின்

பணிப்பாளர் சபை - 2019

- தவிசாளர் - திருமதி. பீ.ஜீ.எஸ். குணதிலக்க

- பணிப்பாளர் - மருத்துவர் (திரு) அனில் ஜாசிங்க
  சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் -
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.

- பணிப்பாளர் - மருத்துவர் திருமதி சாந்தி குணவர்த்தன
  சமூக மருத்துவ நிபுணர்
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.

- பணிப்பாளர் - சட்டத்தரணி செல்வி எச்.எம். சமிந்திகா
  ஹேரத் சட்ட அலுவலர்
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு.

- பணிப்பாளர் - திருமதி தேஜா ஹேரத்
  சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்
  கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.

- பணிப்பாளர் - மருத்துவர் திருமதி தமயன்தி ஹபுகொட
  சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவர்
  பாணத்துறை பொது வைத்தியசாலை.

- அவதானிப்பாளர் - திருமதி. எம்.ரி.ஆர். சித்திரலதா
  பிரதான கணக்காளர்,
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

- திருமதி. தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்
  பணிப்பாளர் சபையின் செயலாளர்.

திரிபோஷ கம்பனியின் சுருக்கமான அறிமுகம்

*	முகவரி	-	த.பெ.17, நீர்கொழும்பு வீதி, கப்புவத்த, ஜா-எல
*	தொலைபேசி இலக்கம்	-	0112 - 236588, 0112 - 237418, 0112 - 233451
*	தொலை நகல் இலக்கம்	-	0112 - 237363
*	மின்னஞ்சல் முகவரி	-	thriposha@gmil.com
*	அமைச்சு	-	சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
*	நிறுவனத்தின் தன்மை	-	சுகாதார அமைச்சின் கீழ் முழுமையான அரசுடைமை கம்பனி
*	கம்பனியின் பதிவு இலக்கம்	-	PB/3873
*	பிரதான உற்பத்தி	-	போஷாக்கு நிறைந்த ஆரோக்கியம் மிக்க திரிபோஷா துணை உணவு மற்றும் விற்பனைக்காக சுபோஷ உணவு
*	திரிபோஷா விநியோக நிலையம்	-	நாடுபூராகவுமுள்ள சுகாதார மருத்துவ நிலையங்கள் பெருந்தோட்டங்கள் சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு நிலையங்கள்
*	சுபோஷா விநியோக நிலையம்	-	நாடு பூரகவும் உள்ள 47 விற்பனை முகவர்கள் ஊடாக விநியோகிக்கப்படுகின்றது.
*	விநியோகிக்கப்படும் முறை	-	புகையிரத சரக்குப் பெட்டிகள் மற்றும் லொறிகள் மூலம்
*	பயனாளிகள்	-	கர்பிணித் தாய்மார்கள் பாலூட்டும் தாய்மார்கள் போஷாக்குத் தேவைப்படும் குழந்தைகள் சில நோயாளிகள்
*	மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை	-	பத்துலட்சத்தை விஞ்சியுள்ளது
*	வங்கி	-	இலங்கை வங்கி
*	கணக்காய்வாளர்	-	கணக்காய்வாளர் அதிபதி, கணக்காய்வாளர் திணைக்களம் இல 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு - 2019

- திரு தர்ஷன சிறிவர்தன
  தவிசாளர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு
  பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

- மருத்துவர் திருமதி சாந்தி குணவர்த்தன
  உறுப்பினர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு
  பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

- சட்டத்தரணி செல்வி எச்.எம். சமிந்திகா ஹேரத் உறுப்பினர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு
  பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

- திருமதி. என்.என்.கே. திவாகர
  அவதானிப்பாளர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு
  கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்

- திருமதி. எம்.ரி.ஆர். சித்திரலதா
  அவதானிப்பாளர் -கணக்காய்வு முகாமைத்துவக்குழு
  பிரதான கணக்காளர், சுகாதாரம் அமைச்சு

- திரு. டி.பி. தரிந்து சாமிக
  நிதி முகாமையாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

- திரு.எல்.ஜே.எஸ்.பிரேமசந்திர
  ஏற்பாட்டாளர் - கணக்காய்வு முகாமைத்துவக் குழு.
  உள்ளக கணக்காய்வாளர் -
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

பிரதான கொள்வனவுக் குழு (100 மில்லியன் ரூபா வரை)	**சிறிய கொள்வனவுக் குழு (10 மில்லியன் ரூபா வரை)**
• திருமதி. பீ.ஜீ.எஸ். குணதிலக்க தவிசாளர், ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி	• திரு. சம்பிகா சல்காது சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு) ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
• திரு. பி.பி.எஸ்.ஆர்.டி. சில்வா சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கொள்முதல்)	• திருமதி.தனுஜா பிரியதர்சனி அல்விஸ் சிரேஷ்ட முகாமையாளர் (மனித வளம் மற்றும் சட்டம்) ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
• திருமதி, ஆர்.ஏ.கே. பொன்சேகா கணக்காளர் மருத்துவ ழங்கல் பிரிவு	• திரு. டி.பி. தரிந்து சாமிக்க உதவி கணக்காளர் ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

திரிபோஷ கம்பனியின் வரலாறும் தற்போதைய முன்னேற்றமும்

வரலாறு

1973 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சுக்கும் கெயார் அமைப்புக்கும் மத்தியில் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் பேரில் அமெரிக்காவிலிருந்து திரிபோஷா இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் பொதி செய்யப்பட்டு இலக்கிடப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டில் விலைமனு கோரப்பட்டு இலங்கை புகையிலை கம்பனிக்கு திரிபோஷா வேலைத்திட்டத்தின் முகாமைத்துவம் கையளிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டில் கெயார் முழுமையாக இந்த வேலைத்திட்டத்திலிருந்து ஒதுங்கியது. 1987 ஆம் ஆண்டு முதல் 2010.09.17 ஆம் திகதி வரை இலங்கை புகையிலைக் கம்பனியினால் சுகாதார அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாட்டின் போஷாக்கின்மையை இல்லாதொழிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை மிக பலப்படுத்தும் நோக்கில் திரிபோஷக் கம்பனியை அரசாங்கத்திற்கு உடைமையாக்கிக் கொண்டு அதன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர், 2010-09-17 ஆம் திகதிய 2007 இல. 07 கம்பனிகள் சட்டத்தின் கீழ் "வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி" என்னும் பெயரில் முழுமையாக அரசுடமையான கம்பனியாக நிறுவப்பட்டது.

பணிப்பாளர் சபை 07 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை திரிபோஷா கம்பனி முழுமையாக முகாமைத்துவ நடவடிக்கைகளை 2011.01.01 ஆம் திகதி பொறுப்பேற்றது.

தற்போதைய முன்னேற்றம்

2010 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கையில் திரிபோஷா பெற்றுக்கொள்ள தகுதிவாய்ந்த பயணாளிகளின் எண்ணிக்கை 928,000 ஆக இருந்தது. இந்தப் பயனாளிகளுக்காக மொத்தமாக மாதாந்தம் தேவையான திரிபோஷாவை வழங்கல் செய்வதற்கு 1,392 மெ.தொ. உற்பத்தி செய்யவேண்டியிருந்தது. ஆயினும், மாதாந்த உற்பத்தி 725 மெ.தொ. ஆக இருந்தது. அது மொத்த தேவைப்பாட்டின் 52% ஆகும்.

2019 ஆம் ஆண்டில் மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 1,077,243 ஆக இருந்தது. மாதாந்தம் தேவையான திரிபோஷாவின் அளவு 1,615 மெ.தொ. ஆகும். மாதாந்த உற்பத்தி 979 மெ.தொ. ஆக இருந்தது. அது மொத்த தேவைப்பாட்டின் 60% ஆகும்.

இந்த வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சுபோஷ அளவு 3,717 மெ.தொ. ஆகும். சுபோஷ விற்பனை வருமானம் 747 மில்.ரூபா ஆகும். அதில் 540 மில்.ரூபா தொகை செலவினமாக சுகாதார அமைச்சுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சேவை வகுதிகள், பதவிகள் மற்றும் பதவியணி

01.	**சிரேட்ட முகாமையாளர்கள்**			
	*	சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு)	01	
	*	சிரேட்ட முகாமையாளர் (மனித வளங்கள், சட்டம்)	01	02
02.	**நடுத்தர மட்ட முகாமையாளர்கள்**			
	*	முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி சேவை)	01	
	*	முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு)	02	
	*	முகாமையாளர் (நிதி)	01	
	*	முகாமையாளர் (சந்தை ஊக்குவிப்பு)	01	05
03.	**கனிஷ்ட முகாமையாளர்கள்**			
	*	விநியோக உத்தியோகத்தர்	01	
	*	உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்	01	
	*	நிதி உத்தியோகத்தர்	01	
	*	வழங்கல் உத்தியோகத்தர்	01	
	*	பண்டகசாலை உத்தியோகத்தர்	01	
	*	களஞ்சியசாலை உத்தியோகத்தர்	01	
	*	உற்பத்தி உத்தியோகத்தர்	03	
	*	நிருவாக உத்தியோகத்தர்	01	
	*	நிதி உத்தியோகத்தர்	01	
	*	பொறியியல் சேவை உத்தியோகத்தர்	01	12
04.	**முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்பம்)**			04
05.	**முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்பம் சாராத)**			18
06.	**தொடக்கநிலை சேவைகள்**			
	தொடக்கநிலை சேவைகள் (தேர்ச்சி பெற்ற)			
	*	சாரதி	07	
	*	மின் தொழினுட்பவியலர்	04	11
	தொடக்கநிலை சேவைகள் (பகுதி தேர்ச்சி)			
	*	கொதிகலன் தொழினுட்பவியலர்	03	
	*	பொருத்துநர்கள்	03	
	*	லேத் மெசின் இயக்குநர்கள்	02	
	*	இயந்திர இயக்குநர்கள்	28	
	*	தரப் பரிசோதகர்கள்	07	
	*	தீயணைப்பு உதவியாளர்	01	
	*	போர்க்லிப்ட் இயந்திர இயக்குநர்	02	46
	தொடக்கநிலை சேவைகள் (தேர்ச்சியற்ற)			
	*	தோட்டக்காரர்	02	
	*	தொழிலாளர் / அலுவலக உதவியாளர்	02	
	*	பொது தொழிலாளர்	129	
	*	தொழிலாளர் மேற்பார்வையாளர்	01	134
			மொத்தம்	**232**

2019 ஆம் ஆண்டில் பெறுகை செயல்முறையைப் பின்பற்றி பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் தொடர்பிலான விபரங்கள்

- **சோயா அவரை**

எஸ்.டீ.கே.யுனைடட் எக்ரிவென்சஸ் பிறைவட் லிமிடட்
இல. 1280/5, ரஜமல்வத்தை,
பத்தரமுல்லை.

- **சோளம்**

கே.எஸ்.ரி. எவர்கிரீன் (தனியார் கம்பனி)
இல. 71,
நீர்கொழும்பு வீதி,
கந்தானை.

தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை
இல 45, கிரிமண்டல மாவத்தை,
நாராஹென்பிட்ட,
கொழும்பு 05.

- **பால்மா**

மில்கோ கம்பனி,
இல.45, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட.

- **கிராவ்ட் பேப்பர்**

அப்துல்லா இன்டஸ்ட்ரீஸ் பெகேஜஸ் (பிறைவட்) லிமிடட்
இல,72 மகா வித்தியால வீதி,
கொழும்பு 13.

- **கொரிகேடட் பெட்டி**

வ/ப எக்ஸ்பெக் கொரிகேடட் கார்டூன் (தனியார்) கம்பனி
இல. 79, பட்டிவல வீதி,
கோனவலை,
களணி.

- **பொலித்தீன்**

வ/ப நிவ் ஜீவா இன்டஸ்ட்ரி (தனியார்) கம்பனி
இல - 71 பீ, காசல் ஹில் வீதி,,
கண்டி.

வ/ப செல்மோ (தனியார்) லிமிட்டெட்
இல.59/1 நாரம்பொல வீதி,
மொரகல, தெகடன.

ரென்ப பொக்சிபல் பெகேஜிங் (தனி.கம்பனி)
டி. 01, கைத்தொழில் குடியேற்றம்,
ஏக்கல, ஜாஎலை.

விட்டமின்

ஜே.கே.டிரேட்லிங் (தனியார்) கம்பனி
இல.44, தலவத்துகொட வீதி,
பிட்டகோட்டை.

டி.பி.ஒ. லங்கா (தனியார் கம்பனி)
இல. 235/2, ஹேகித்த வீதி,
வத்தளை.


கனிமங்கள்

வ/ப டபலைன் (தனியார்) கம்பனி
இல. 188,
ஹைலெவல் வீதி,
மீகொடை.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை திரிபோஷ உற்பத்தி (மாஸ்டர் பக்கெட்டுகளில்)

மாதம்	2015	2016	2017	2018	2019
சனவரி	47,901	57,542	56,236	51,069	43,003
பெப்ரவரி	43,679	53,416	48,288	40,351	35,715
மார்ச்	53,206	55,410	58,150	47,969	47,125
ஏப்ரல்	42,176	44,501	46,956	25,720	28,954
மே	57,367	52,757	49,432	55,122	38,109
யூன்	53,393	15,757	40,134	50,268	43,372
யூலை	61,000	-	48,128	49,042	38,534
ஆகஸ்ட்	57,719	3,060	53,179	40,374	52,835
செப்ரெம்பர்	60,182	38,071	36,295	48,670	47,082
ஒக்ரோபர்	62,381	38,806	27,311	50,036	71,004
நவெம்பர்	60,908	47,392	49,829	47,152	57,490
திசெம்பர்	48,633	28,898	30,017	23,703	17,329
மாஸ்டர் பெக்ஸ்	**648,545**	**435,610**	**543,955**	**529,476**	520,552
மெற்றிக் தொன்	**14,592**	**9,801**	**12,239**	**11,913**	11,712


2015 தொடக்கம் 2019 வரை வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)



2017 ஏப்ரல் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு வரை சுபோஷ உற்பத்தி (மெ.தொ)

மாதம்/ வருடம்	2017	2018	2019
சனவரி	-	118	267
பெப்ரவரி	-	190	291
மார்ச்	-	296	393
ஏப்ரல்	49	174	142
மே	69	112	381
யூன்	56	261	283
யூலை	157	277	283
ஆகஸ்ட்	152	229	317
செப்ரெம்பர்	157	265	294
ஒக்ரோபர்	135	300	430
நவெம்பர்	252	224	321
திசெம்பர்	180	161	315
மொத்தம்	**1,207**	**2,607**	**3,717**

2017 ஏப்ரல் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு வரை சுபோஷ உற்பத்தி வரைபடம் மூலம் (மெ.தொ)



2020 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இலக்கு

- இலவசமாக வழங்கப்படும் திரிபோஷ உற்பத்தியை அனைத்து பயனாளிகளுக்கும் வழங்குவதில் 100% இலக்கை வெற்றிகொள்ளல்.
- உள்நாட்டு விவசாயியை மேலும் பாதுகாக்கும் நோகில் அவர்களது உற்பத்திகளை விவசாய சங்கங்கள் ஊடாக திரிபோஷா நிறுவனத்திற்குப் பெற்றுக்கொள்ளல்.
- எமது சுபோஷ விற்பனை முகவர்களின் வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தல்.
- உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்குத் தேவையான பிரதான மூலப் பொருட்களை அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய கொள்வனவு செய்து மூலப் பொருள் பற்றாக்குறைக்கு தீர்வு காணல்.
- உற்பத்தி நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனுடனும் உயர் தரத்திலும் மேற்கொள்வதற்கு பின்வருவனவற்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
    - ✓ குளிரூட்டல் தொகுதியொன்றை தொழிற்சாலைக்குள் நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை நிறைவு செய்தல்..
    - ✓ சோளம் மற்றும் சோயா அவரையை களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான சைலோ தொகுதியை நிர்மாணித்தல்.

2020 ஆம் ஆண்டு திரிபோஷ உற்பத்தியை பின்வருமாறு அதிகரிப்பது நிறுவனத்தின் முதன்மை நோக்கமாகும்.

மாதம்	அளவு (மெ.தொ)
சனவரி	2,748
பெப்ரவரி	2,424
மார்ச்	2,775
ஏப்ரல்	2,221
மே	2,653
யூன்	2,869
யூலை	2,761
ஆகஸ்ட்	2,748
செப்டம்பர்	2,748
ஒக்டோபர்	2,734
நவம்பர்	2,532
டிசம்பர்	2,343
மொத்தம்	**31,556**

திரிபோஷா விநியோக செயற்பாடு

திரிபோஷ தொழிற்சாலை (ஜா-எல)



விநியோக நடவடிக்கைகள் (லொறி, புகையிரத சரக்குப் பெட்டிகள்)





பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள்

சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்

சுகாதார நிலையம் (கிளினிக்)

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்

பெருந்தோட்டம்

சிறுவர் நிலையங்கள்







திரிபோஷ விநியோக நிலையங்கள்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் மூலம் திரிபோஷ உற்பத்தி செய்யப்பட்டு சுகாதார அமைச்சின் ஊடாக முறையாக விநியோகிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

	மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம்
1.	மத்திய மாகாணம்
2.	கிழக்கு மாகாணம்
3.	வடமத்திய மாகாணம்
4.	வடமேல் மாகாணம்
5.	வட மாகாணம்
6.	சப்பிரகமுவ மாகாணம்
7.	தென் மாகாணம்
8.	ஊவா மாகாணம்
9.	மேல் மாகாணம்

	பெருந்தோட்டம்
1.	ஹட்டன்
2.	மாத்தளை
3.	கேகாலை
4.	கண்டி
5.	களுத்துறை
6.	நுவரெலியா
7.	மாத்தறை
8.	பதுளை
9.	காலி
10.	இரத்தினபுரி

	பிற
1.	இராணுவ மருத்துவமனை
2.	பொலிஸ் மருத்துவமனைகள்
3.	முன்பள்ளிகள்
4.	நகர சபைகள்
5	நீர்கொழும்பு
6	கொழும்பு
7	மாத்தளை
8	காலி
9	கண்டி

	சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் அதிகார பிரதேசம்
1.	அநுராதபுரம்
2.	பத்தரமுல்லை
3.	பதுளை
4.	காலி
5.	யாழ்ப்பாணம்
6.	திருகோணமலை
7.	குருநாகல்
8.	இரத்தினபுரி
9.	கேகாலை
10.	கண்டி

	பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம்		
1.	அம்பாறை	14.	கண்டி
2.	அநுராதபுரம்	15.	கேகாலை
3.	பதுளை	16.	கிளிநொச்சி
4.	மட்டக்களப்பு	17.	குருநாகல்
5.	கொழும்பு	18.	மாத்தளை
6.	காலி	19.	மாத்தறை
7.	கம்பஹா	20.	மன்னார்
8.	அம்பாந்தோட்டை	21.	மொனராகலை
9.	யாழ்ப்பாணம்	22.	நுவரெலியா
10.	கல்முனை	23.	பொலன்நறுவை
11.	களுத்துறை	24.	புத்தளம்
12.	இரத்தினபுரி	25.	வவுனியா
13.	திருகோணமலை		

சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவு							
1.	அம்பாறை	07	10.	கல்முனை	13	19	மாத்தறை 16
2.	அநுராதபுரம்	18	11.	களுத்துறை	13	20	மன்னார் 03
3.	பதுளை	15	12.	இரத்தினபுரி	17	21	மொனராகலை 11
4.	மட்டக்களப்பு	13	13.	திருகோணமலை	10	22	நுவரெலிய 11
5.	கொழும்பு	11	14.	கண்டி	21	23	பொலன்னறுவை 07
6.	காலி	19	15.	கேகாலை	11	24	புத்தளம் 11
7.	கம்பஹா	16	16.	கிளிநொச்சி	04	25	வவுனியா 04
8.	அம்பாந்தோட்டை	12	17	குருநாகல்	23		
9.	யாழ்ப்பாணம்	11	18	மாத்தளை	12		

2019 ஆம் ஆண்டு திரிபோஷா விநியோக தகவல்கள்

பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம்	பயனாளிகளின் எண்ணிக்கை 2019	2019 ஆம் ஆண்டுவிநியோகிக்கப்பட்ட திரிபோஷா மாஸ்டர் பொதிகளின் எண்ணிக்கை
அம்பாறை	26,115	11,173
அநுராதபுரம்	54,570	23,146
பதுளை	41,070	13,609
மட்டக்களப்பு	53,175	17,725
கொழும்பு	67,590	44,327
காலி	45,675	18,117
கம்பஹா	55,770	31,044
அம்பாந்தோட்டை	37,125	23,776
யாழ்ப்பாணம்	23,115	9,336
கல்முனை	49,260	16,489
களுத்துறை	38,775	21,237
கண்டி	67,920	27,870
கேகாலை	29,355	20,112
கிளிநொச்சி	6,525	3,312
குருநாகல்	77,430	30,128
மன்னார்	8,145	5,693
மாத்தளை	29,685	11,755
மாத்தறை	52,605	23,577
மொனராகலை	28,365	11,135
முல்லைத்தீவு	5,040	3,945
நுவரெலிய	62,700	27,504

பொலன்னறுவை	41,805	15,546
புத்தளம்	30,960	21,285
இரத்தினபுரி	47,670	31,857
திருகோணமலை	27,015	10,370
வவுனியா	10,440	4,176
தோட்டங்கள்	31,384	22,165
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை	23,849	18,394
மார்பு வைத்தியசாலை	4,410	2,936
மொத்தம்	**1,077,243**	**521,742**

சந்தைப்படுத்தல் பிரிவு

01. சந்தைப்படுத்தல் பிரிவின் ஆரம்பம்

“அரசாங்க கொள்கைக்கு அமைய வேறு அனுமதிக்கப்பட்ட போஷணைப் பதார்த்தங்களை தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்தல்” ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனி நிறுவப்பட்டதன் இன்னுமொரு நோக்கமாகும். இந்த நோக்கத்தை வெற்றிகொள்ளும் முகமாக 2016 ஆம் ஆண்டில் புதிய இயந்திர சாதனங்கள் நிறுவப்பட்டதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மிகை திரிபோஷா உற்பத்தி “சுபோஷ” எனும் பெயரில் 2017 சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

02. சந்தைப்படுத்தல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்

அரசாங்க நிறுவனம் என்பது நட்டத்தில் இயங்கும் நிறுவனம் என்ற மாயைக்கு சவாலாக அரசாங்கத்திற்கு சுமையின்றிய அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கும் நிறுவனமாக அன்றி சுயாதீனமாக உழைத்த வருமானத்தின் மீது இயங்கும் இலாபமீட்டும் நிறுவனமாக திகழ்தல்.

03. சந்தைப்படுத்தல் பிரிவின் விரிவாக்கம்

இந்த சுபோஷ உற்பத்தி கிராம் 100, கிராம் 250, கிராம் 500 மற்றும் 750 ஆகிய 04 வகுதியின் கீழ் விற்பனை முகவர்கள் 06 பேர் ஊடாக கண்டி, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் ஆரம்பமாக சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் 47 பேரைக் கொண்ட விற்பனை முகவர்கள் வலையமைப்பு ஒன்றின் மூலம் நாட்டின் 11 மாவட்டங்களில் விநியோகிக்கப்படுகின்றது. மேலும் திரிபோஷ கம்பனியின் வளாகத்திற்குள் சுபோஷ மற்றும் ஹைலன்ட் தயாரிப்புக்களை விற்பனை செய்வதற்காக விற்பனை அங்காடி ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு சுபோஷ உள்ளிட்ட ஏனைய உற்பத்திகளின் விற்பனையினால் ஈட்டப்படும் வருமானம் ரூ.மில். 3,262 ஆகும். அது வரிக்கு முன்னரான நிகர இலாபம் 178 மில்லியன் ரூபா ஆகும்.

2018 ஆம் ஆண்டு நாம் அடைந்த வெற்றிகள், அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் முகம்கொடுத்த சவால்கள்

2019 ஆம் ஆண்டில் விற்பனை வருமானம்

மாதம்	பெறுமதி (ரூ.ஆயி)
சனவரி	37,025
பெப்ரவரி	51,403
மார்ச்	71,580
ஏப்ரல்	39,366
மே	53,280
யூன்	54,785
யூலை	61,044
ஆகஸ்ட்	69,838
செப்டம்பர்	63,893
ஒக்டோபர்	91,294
நவம்பர்	72,901
டிசம்பர்	80,136
மொத்த விற்பனை வருமானம்	**746,546**

சுபோஷ விற்பனை வருமானம் - 2019



2019 ஆம் ஆண்டில் நாம் அடைந்த வெற்றிகள் மற்றும் முகம்கொடுத்த சவால்கள்

01. சுபோஷ விற்பனை முகவர்களின் வலையமைப்பை 42 வரை அதிகரித்தல். இதன் பெறுபேறாக 2018 ஆம் ஆண்டின் விற்பனை வருமானத்துடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் சுபோஷ வருமானம் 42.76% இனால் அதகரித்துக்கொள்ள இயலுமாகியது. அதற்கமைய நடப்பாண்டில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூ.மில். 78 இலிருது ரூ.மில். 178 வரை அதிகரித்துக்கொள்ள இயலுமாகியது.

02.திரிபோஷா மாவைப் பயன்படுத்தி போஷாக்குள்ள பிஸ்கட் வகையொன்றை அறிமுகம் செய்தல். அதற்கான இயந்திரத் தொகுதியை ஜப்பான் Soken Tech Co. Ltd கம்பனியிலிருந்து கொள்வனவு செய்தல்.

03. 27.50 மில்லியன் ரூபா செலவில் புதிய சாரதி ஓய்வறை மற்றும் வாகனத்தரிப்பிடம் ஒன்றை நிர்மாணித்தல்.

04. 18.78 மில்லியன் ரூபா செலவில் புதிய பொதியிடல் இயந்திரங்கள் 02 ஐ கொள்வனவு செய்தல்.

2019 ஆம் ஆண்டில் முகம்கொடுக்க நேரிட்ட சவால்கள்

01. மிக நீண்ட நாட்கள் துறையில் ஈடுபட்டு வர்த்தப்பெயரை பெற்று சந்தையில் ஏகபோக உரிமையைப் பெற்றுள்ள நிறுவனங்களுடன் போட்டி போட வேண்டிய நிலமை. ஆயினும் உயர் போட்டித் தன்மைக்கு முன்னால் திரிபோஷ வரத்தகக் குறியீட்டுடன் சுபோஷ பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் சந்தையை மற்றும் நுகர்வோரை கவர்வதற்கு முடியுமாக உள்ளது.

02. இந்தக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பாரிய அளவிலான நிறுவனங்கள் பல்வேறுபட்ட பிரச்சார ஊடகங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளுக்கு உயர் பிரச்சாரத்தை வழங்குதல்.

03.வரையறுக்கப்பட்ட காரணிகள் காரணமாக கேள்விக்கான நிரம்பலை வழங்க முடியாமை.

2020 ஆம் ஆண்டின் வெற்றிக்கான முன்மொழிவுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் இலக்குகள்

01. வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப 100% ஐ பூரணப்படுத்துவதற்கு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை தொடர்ந்தும் கொள்வனவு செய்தல்.

02. மூலப்பொருட்கள் தட்டுப்பாடுள்ள காலப் பகுதியில் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு தேவையான மூலப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்தல். இதற்காக மெ.தொ. 4000 கொள்ளளவு கொண்ட சைலோ ஒன்றை நிர்மாணித்தல்.

03. திரிபோஷா கம்பனிக்காக வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல்.

04. சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் சுபோஷ புதிய உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் பிரபல்யப்படுத்தல் மற்றும் சந்தைக்கு அறிமுகம் செய்தல்.

05. விற்பனை முகவர் வலையமைப்பை நாடு முழுவதும் விஸ்தரித்தல்.

06. இறுதி உற்பத்தியை உரிய பயனாளிக்கு வழங்கும் பொருட்டு விநியோக நடவடிக்கைகளை முறைமைப்படுத்தல் மற்றும் வினைத்திறனாக்கல்.

இறுதி இலக்கு

அரசாங்கத்திற்கு சுமையாக
இருக்காது
அரசாங்கத்திடமிருந்து
உதவிபெறும் நிறுவனமாக
அன்றி சுயாதீனமாக
வருமானத்தை உழைக்கும்
நிறுவனமாக திகழ்வது
எமது இறுதி இலக்காகும்.

நன்றி....!!!

எல்லோரையும் ஊக்குவித்து தேவையான அறிவுறுத்தல்களையும் அனுசரணையையும் வழங்கியமை தொடர்பில் சுகாதார அமைச்சர் மாண்புமிகு ராஜித்த சேனரத்ன அவர்களுக்கும் பிரதி சுகாதார அமைச்சர் மாண்புமிகு பைசல் காசிம் அவர்களுக்கும் எம்மை வழிப்படுத்தி எமக்கு தேவையான ஆலோசனைகளையும் அனுமதிகளையும் காலம் தாழ்த்தாது வழங்கிய சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. வசந்தா பெரேரா அவர்களுக்கும் மற்றும் வருடம் தோறும் தேவையான ஒதுக்கீடுகளை எமக்கு வழங்கிய நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் பொது திறைசேரியின் செயலாளர் திரு. கலாநிதி. திரு. எச்.எஸ். சமரதுங்க அவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் அங்கம் வகித்த பணிப்பாளர் சபையின் அனைவரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பு எம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. அத்துடன் எமது வழங்குநர்கள் உட்பட வெளிவாரியாக எமக்குச் சேவை வழங்கும் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

எமது நிறுவனத்தில் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் உள்ள பதவிகளில் திருப்திகரமாக சேவைபுரியும் பதவியணியொன்று காணக்கூடியதாகவுள்ளமை பெருமகிழ்ச்சியாகும். நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்பு மெச்சப்படுதல் வேண்டும். இறுதியாக திரிபோஷ நிறுவனத்திற்கென கட்டியெழுப்பப்பட்ட நற்பெயரைப் பாதுகாத்து எந்நேரமும் உழைக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ கம்பனியின் மொத்த பதவியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை திரிபோஷ லிமிடட்
விஸ்தீரண வருமான மற்றும் செலவினக் கூற்று
2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்புகள்	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
வருமானம்			
வருமானம்	02	3,271,379,657.40	2,806,718,130
கழிப்பனவு : நுகர்வுக்கு தயார் நிலையிலுள்ள உற்பத்திகளின் செலவினம்	03	(2,470,824,588.09)	(2,230,761,256)
: விற்பனை செலவினம்	04	(546,683,677.24)	(424,567,750)
		253,871,392.07	**151,389,124**
வேறு வருமானம்	05	50,441,659.25	37,813,850
கழிப்பனவு (செலவினங்கள்)			
விற்பனை மற்றும் விநியோக செலவு	06	22,243,384.71	19,710,986
நிர்வாகச் செலவுகள்	07	102,800,346.85	80,045,635
நிதி மற்றும் வேறு செலவினம்	08	1,134,223.04	10,805,380
		126,177,954.60	**110,562,001**
ஆண்டுக்கான செலவிலும் கூடிய வருமானம்		**178,135,096.72**	**78,640,973**

இந்த நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 06 தொடக்கம் 27 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந்த நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த முழுமொத்த வருமானக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது

இலங்கை திரிபோஷ லிமிடட்
நிதி நிலமைக் கூற்று
2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று

	குறிப் புகள்	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறை சாராத சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	12	671,709,769.14	655,757,870
புலப்படாத சொத்துக்கள்	13	-	165,297
		671,709,769.14	**655,923,167**
நடைபெறும் மூலதன வேலைகள்	14	-	22,513,629
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்	15	178,860,757.36	127,134,727
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	16	186,986,741.79	212,780,368
காசும் காசுக்குச் சமமானவைகளும்	17	487,882,034.93	335,266,293
		853,729,534.08	**675,181,389**
மொத்தச் சொத்துக்கள்		**1,525,439,303.22**	**1,353,618,185**
பங்குரிமையும் பொறுப்புக்களும்			
மூலதனம் மற்றும் ஒதுக்குகள்			
வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்	18	304,600,000.00	-
பின் செலுத்தும் பொறுப்புக்கள்	19	250,562,775.50	390,085,608
மீள் விலைமதிப்பு ஒதுக்குகள்	20	131,176,703.11	306,378,658
செலவிலும் கூடிய திரண்ட வருமானம்		600,524,514.63	422,306,485
மொத்த பங்குரிமை		**1,286,863,993.24**	**1,118,770,750**
நடைமுறை சாராத பொறுப்புக்கள்			
ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு	21	53,309,803.83	44,898,532
மருத்துவ நிதியம்	22	246,836.57	209,447
		53,556,640.40	**45,107,979**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள்	23	185,018,669.58	189,739,456
மொத்த பங்குரிமையும் பொறுப்புக்களும்		**1,525,439,303.22**	**1,353,618,185**

இந் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 06 தொடக்கம் 27 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த நிதி நிலமைக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது

இந நிது நிலமைக கூறறுகளானவை 2007 ஆம ஆணடின 07 ஆம இலகக கமபனிகள சடடத தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

.....

நிதித் தலைவர்

இந் நிதி நிலமைக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பிற்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.

சபைக்காகவும் சபையின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது

.....
தலைவர்

.....
பணிப்பாளர்

ஜா எல, கப்புவத்த
திகதி: 27/02/2020

இலங்கை திரிபோஷ லிமிடட்
பங்குரிமை மாற்றக் கூற்று
2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்பு	வெளிப்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா சதம்	மூலதன ஒதுக்குகள் ரூபா சதம்	மீள் விலைமதிப்பு ஒதுக்குகள் ரூபா சதம்	செலவிலும் கூடிய திரண்ட வருமானம் ரூபா சதம்	மொத்தம் ரூபா சதம்
2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி			395,491,067.02	306,378,657.65	343,665,512.04	1,045,535,236.71
சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனக் கொடை			50,974,042.59	-	-	50,974,042.59
பெறுமானத் தேய்வு - சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனச் சொத்துக் கொடை			(56,379,502.03)	-	-	(56,379,502.03)
2018 செலவிலும் கூடிய வருமானம்			-	-	78,640,973.06	78,640,973.06
2018.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		-	390,085,607.58	306,378,657.65	422,306,485.10	1,118,770,750.33
2019.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		-	390,085,607.58	306,378,657.65	422,306,485.10	1,118,770,750.33
சீராக்கம்	18	304,600,000.00	(129,574,367.55)	(175,025,632.45)	-	-
மிகை / கழிப்பனவு - 2019		-	49,916,074.87	(176,322.09)	-	49,739,752.78
பெறுமானத் தேய்வு - சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனச் சொத்துக் கொடை	19	-	(59,864,539.38)	-	-	(59,864,539.38)
முன்னைய ஆண்டுக்கான சீராக்கம்	24	-	-	-	82,932.81	82,932.81
2019 செலவிலும் கூடிய வருமானம்		-	-	-	178,135,096.72	178,135,096.72
2019.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		304,600,000.00	250,562,775.52	131,176,703.11	600,524,514.63	1,286,863,993.26

இலங்கை திரிபோஷ லிமிடட்
காசுப் பாய்ச்சற் கூற்று
2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	31/12/2019 ரூபா	31/12/2018 ரூபா
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
ஆண்டுக்கான செலவிலும் கூடிய வருமானம்	178,135,097	78,640,973
சீராக்கங்கள்		
தேய்மானம்	61,971,983	57,664,125
தேய்மான நட்டம்	-	10,639,533
நிறுத்திவைத்தல் வரி	277,251	-
வட்டி வருமானம்	(14,433,406)	-
ஆண்டுக்கான பணிக்கொடை ஏற்பாடு	14,827,855	5,663,671
மருத்துவப் பங்களிப்புக்கான ஏற்பாடு	208,740	231,068
முன்னைய ஆண்டு சீராக்கங்கள்	(1,420,800)	-
	61,431,623	**74,198,397**
தொழிற்படு மூலதனத்திற்கான மாற்றங்களின் முன்னரான தொழிற்பாட்டு இலாபம்	**239,566,719**	**152,839,370**
தொழிற்படு மூலதனத்திலான மாற்றங்கள்		
கடன்படுனர் மற்றும் ஏனைய வருமதிகளிலான அதிகரிப்பு /(குறைவு)	25,793,626	(63,429,775)
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளிலான அதிகரிப்பு /(குறைவு)	(4,720,786)	58,913,620
இருப்புக்களில் அதிகரிப்பு /(குறைவு)	(51,726,030)	72,948,513
	(30,653,190)	**68,432,358**
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் உருவாக்கம்	**208,913,530**	**221,271,728**
கழிப்பனவு (செலுத்தப்பட்ட பணிக்கொடை)	(6,416,584)	(3,721,918)
மருத்துவ நன்மைக் கொடுப்பனவு	(171,350)	(198,044)
வரிக்குப் பின்னரான தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**202,325,596**	**217,351,767**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல்	(77,758,585)	(55,024,828)
குறுகியகால முதலீடுகள்	(125,000,000)	-
நடைபெறும் மூலதன வேலை	22,513,629	(22,513,629)
கிடைக்கப்பெற்ற வட்டி	7,642,613	642,143
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(172,602,343)**	**(76,896,315)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனக் கொடை	(10,124,787)	(5,405,459)
காசும் காசுக்குச் சமமான விடயங்களிலான மாற்றங்கள்	19,598,466	135,049,992
முன்கொண்டு வந்த காசும் காசுக்குச் சமமான விடயங்களும்	183,342,473	200,216,301
முன்கொண்டு சென்ற காசும் காசுக்குச் சமமான விடயங்களும்	**202,940,940**	**335,266,293**
நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட்ட காசும் காசுக்குச் சமமான விடயங்களின் பகுப்பாய்வு		
கையிலுள்ள காசு	-	20,000
இலங்கை வங்கி - ஜா எல -71324617	16,524,816	29,691,455
இலங்கை வங்கி - ஜா எல கண' இல 80306903	186,416,124	153,631,019
திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடு	-	92,580,625
நிலையான வைப்புக்கள் மீதான முதலீடு	-	59,343,195
	202,940,940	**335,266,293**

இலங்கை திரிபோஷ லிமிடட்

உற்பத்திக் கணக்கு

2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்பு	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
உற்பத்திச் செலவு			
மூலப் பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள்			
2019.01.01 ஆம் திகதி மீதி		88,411,099.24	146,784,459
கொள்வனவு	09	2,065,207,867.92	1,813,404,373
		2,153,618,967.16	1,960,188,832
கையிருப்பு சேதம்		(291,031.60)	-
2019.12.31 ஆம் திகதி மீதி	15	(117,286,466.32)	(88,411,099)
நுகர்வு மூலப்பொருட்களின் செலவு		**2,036,041,469.24**	**1,871,777,733**
நேரடி உழைப்புச் செலவு மற்றும்	10	213,981,333.10	187,261,755
தொழிற்சாலை தலைக்குரிய செலவு	11	205,377,938.96	162,148,537
மீள் பொதியிடல் நட்டம்		-	(112,656)
அடிப்படைச் செலவு		**2,455,400,741.30**	**2,221,075,368**
நடைபெறும் வேலை			
2019.01.01 ஆம் திகதி மீதி		12,605,572.55	2,388,929
2019.12.31 ஆம் திகதி மீதி	15	(2,192,397.76)	(12,605,573)
		10,413,174.79	(10,216,643)
மொத்த உற்பத்திச் செலவு		**2,465,813,916.09**	**2,210,858,725**

05

1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1.1 அறிக்கையிடும் நிறுவனம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா லிமிடட் நிறுவனம் முழுமையாக அரசுடமையான கம்பனி ஒன்றாக இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு தாபிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இயங்கிவரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இக்கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தளமும் த.பெ. இல. 17, கப்புவத்தை, ஜா எல, இலங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

1.1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைத் தன்மை

சுகாதார அமைச்சின் "திரிபோஷ விநியோக நிகழ்ச்சித் திட்டம்" சார்பில் "திரிபோஷ" உற்பத்தி செய்யும் ஒரே கம்பனி இந்தக் கம்பனியாகும்.

இந்த கம்பனியின் ஏனைய பிரதான செயற்பாடுகள் பின்வருவனவாகும்:

- இலங்கையில் தாய், சேய் போசாக்கின்மையைக் குறைக்கும் பொருட்டு இலங்கையின் ஊட்டச்சத்துமிக்க குறைநிரப்பு உணவு உற்பத்தியான "திரிபோஷ" வினது மேம்பாடு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு உதவுதல்.
- திரிபோஷ உற்பத்திக்கான மூலப் பொருட்களை வழங்கும் உள்நாட்டு விவசாயிகளின் வருமான பிறப்பாக்க வழியினை ஊக்கப்படுத்தல்.
- அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் வேறு ஏதேனும் வடிவத்திலான ஊட்டச்சத்துமிக்க கலக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கு நிலவும் சந்தை வாய்ப்பை குறைத்தல்.
- திரிபோஷவின் வருடாந்த தேவைப்பாட்டினை மதிப்பிடுதல் மற்றும் வழங்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கையினை எடுத்தல்.

1.1.3 பணிப்பாளர் சபை

1. திருமதி. பீ.ஜீ.எஸ். குணதிலக்க (தலைவர்)
2. வைத்தியர் (திரு) அனில் ஜாசிங்க
3. வைத்தியர் (திருமதி) ஷாந்தி குணவர்த்தன
4. திருமதி எச்.எம். தேஜா ஹேரத்
5. திருமதி சமிந்திகா ஹேரத்
6. வைத்தியர் (திருமதி) தமயந்தி ஹப்புகொட
7. திருமதி. சாகரிகா போகஹவத்த
8. திருமதி ரீ.ஆர்.சி. சித்திரலதா (அவதானிப்பாளர்)

சபைச் செயலாளர்

திருமதி. தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்

1.1.4 கணக்காய்வாளர்கள்

தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல 306/72,பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

1.1.5 வங்கியாளர்கள்

இலங்கை வங்கி,

ஜா எல

1.1.6 வெளியீட்டிற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியின் நிதிக்கூற்றுக்களை பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கிணங்க வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கீப்பட்டது.

1.1.7 தயாரிப்பிற்கான அடிப்படை

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் தரங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களினால் உருவாக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. சாதாரணப் பெறுமதியின் மீது அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர்ந்த வரலாற்றுச் செலவினத்தின் ஒப்புதலின் கீழ் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டி உள்ளது. கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அவற்றைப் பயன்படுத்தும் செயன்முறையின் போது முகாமைத்துவம் தனது தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. உயர் மட்டத்திலான தீர்மானம் அவசியப்படுகின்ற அல்லது சிக்கல் நிலமை உருவாகும் துறைகள் அல்லது கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கு எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் முக்கியத்துவம் பெறுகின்ற துறைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

(அ) ஒத்திசைவுக் கூற்று

வருமானக் கூற்று, முழுமொத்த வருமான மற்றும் செலவினக் கூற்று, நிதி நிலமைக் கூற்று, உரிமை முதலிலான மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்று ஆகியவற்றினை உள்ளடக்கும் நிதிக் கூற்றுக்களானவை கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன் சேர்த்து ("நிதிக் கூற்றுக்கள்") இலங்கை பட்டயக் கணக்காளர் சங்கத்தினால் வெளியிடப்பட்டவாறான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாட்டுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அளவீட்டிற்கான அடிப்படை

உரிய குறிப்புகளின் கீழ் உண்மைப் பெறுமதி குறித்து பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படும் இடங்கள் தவிர வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பீட்டுத் தகவல்கள்

அளவு, எடுத்துரைப்பு மற்றும் விவரிப்பு சார்ந்த தகவல்கள் உள்ளடங்கலான ஒப்பீட்டுத் தகவல்களானவை, நிகழ்கால நிதிக் கூற்றுக்களின் புரிந்துகொள்ளலை

முன்னேற்றும் பொருட்டும் இடைக்கால ஒப்பீட்டுத் தன்மையினை மேம்படுத்தும் பொருட்டும் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட சகல தொகைகளுக்குமான முன்னைய காலப்பகுதி தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கீழே விதித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளானவை, வேறு வகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலொழிய, இந் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட சகல காலப்பகுதிக்கும் ஒரே மாதிரியாகவே பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களின் முன்னளிப்பு அல்லது விடய உருப்படிகளின் வகைப்பாடானது திருத்தப்பட்டிருக்கும் பொழுது சிறந்த முன்னளிப்பினை வழங்கும் பொருட்டு நிகழ்கால ஆண்டுடன் ஒத்திசைவதற்கென ஒப்பீட்டுத் தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்பும்

இக் கம்பனியின் நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்புமாகவுள்ள இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்ட சகல நிதித் தகவல்களும், வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, கிட்டிய ஆயிரத்துக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

(உ) அடிப்படை மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்வுகளைப் பயன்படுத்தல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்வைப்பும் ஆனது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றைச் செய்வதற்கு முகாமையினைத் தேவைப்படுத்துகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட முடிவுகள் என்பற்றை விட வித்தியாசப்படக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் கீழுள்ள எடுகோள்கள் என்பன தொடர்ந்து செல்லும் ஓர் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்களானவை, அத் திருத்தமானது குறித்த காலப்பகுதியினை மாத்திரம் பாதித்தால் இம் மதிப்பீடானது திருத்தப்படும் காலப்பகுதியில் அல்லது திருத்தக் காலப்பகுதியிலும் அத்துடன் அத் திருத்தமானது நிகழ்காலப்பகுதியினையும் எதிர்காலப்பகுதியினையும் பாதித்தால் எதிர்காலத்திலும் இனங்காணப்பட்டுள்ளன.

(ஊ) நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நிலமை

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நடவடிக்கை என்ற ரீதியில் கம்பனியை தொடர்ந்தும் பேணுவதற்கு அதற்குள்ள ஆற்றல் தொடர்பில் பணிப்பாளர் சபை மதிப்பீடொன்றை செய்துள்ளது. தனது செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தேவையான அளவு வளங்கள் கம்பனியிடம் உள்ளதாக சபை திருப்தியடைந்துள்ளது. அதற்கிணங்க, கம்பனியை செயற்பாட்டு நிலமையில் பேணும் உத்தேசத்துடன் எதிர்காலத்தில் தொடர்ந்தும் பேணிவருவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

1.2 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பு அடிப்படைகளும்

1.2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

(அ) சொத்தினை இனங்காணல் மற்றும் அளவீடு செய்தல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உருப்படிகளானவை திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் அல்லது உண்மைப் பெறுமதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய சகல உருப்படிகளும் ஆரம்பத்தில் திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. சொத்து ஒன்றின் முக்கியமான கூறுகளானவை வெவ்வேறாக இனங்காணப்பட்டு தேய்விடப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் முக்கியமான பகுதிகளானவை கால இடைவெளிகளில் பதிலீடு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும் போது நிறுவனமானது பதிலீடு செய்யப்பட்ட பகுதியினை இனங்காணலிலிருந்து நீக்குவதுடன் புதிய பகுதியினை அதன் சொந்த இணைந்த பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்வு ஆகியவற்றுடன் சேர்த்து இனங்காண்கின்றது. ஏனைய சகல திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகளும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

(ஆ) கிரயம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கிரயமானது அதன் கொள்வனவு விலையினையும் மற்றும் அதன் உத்தேச பாவனைக்காக தொழிற்படு நிலையில் அச் சொத்தினைக் கொண்டுவருவதற்கு நேரடியாக விளைந்த ஏதேனும் கிரயத்தினையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் உழைக்கும் ஆற்றலைப் பேணுவதற்கு அல்லது அதிகரிப்பதற்கென நிரந்த அடிப்படையில் சொத்துக்களை கொள்ளல் செய்தல், விஸ்தரித்தல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக உறப்படும் அடுத்துவந்த செலவினமானது மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டுள்ளது.

பிரதான பரிசோதிப்பு மற்றும் பிரதான திருத்தச் செலவினம் உள்ளடங்கலாக, வெவ்வேறாக கணக்கிடப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றின் கூறு ஒன்றினை பதிலீடு செய்வதற்கு உறப்படும் செலவினமானது மூலதனமாகக் கருதப்படும். அடுத்துவந்த ஏனைய செலவினமானது, அப் பகுதிக்குள் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளானவை கம்பனிக்கு ஏற்படுவதுடன் அதன் கிரயமானது நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால் மாத்திரமே மூலதனமாகக் கருதப்படும்.

(இ) மீள்மதிப்பீடு செய்தல்

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டு இலங்கை திரிபோஷ கம்பனிக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்கள்,பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களும் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு, அது தொடர்பான அறிக்கை கிடைக்கவுள்ளது.)

(ஈ) தேய்வு

அத்தகைய சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு பதிவழிக்கும் பொருட்டு வருடம் ஒன்றுக்கு பின்வரும் வீதங்களில் நேர்கோட்டு (Straight - Line basis) அடிப்படையில் மூலதன ஒதுக்கிற்கு தேய்வானது சாட்டுதல் செய்யப்படுகின்றது.

கட்டடங்கள்	20 வருடங்களுக்கு மேல்
பொறித்தொகுதியும் இயந்திர சாதனமும்	20 வருடங்களுக்கு மேல்
மோட்டார் வாகனங்கள்	05 வருடங்களுக்கு மேல்
உபகரணம் மற்றும் கருவிகள்	05 வருடங்களுக்கு மேல்
ஆய்வுகூட உபகரணம்	05 வருடங்களுக்கு மேல்
விவசாய உபகரணம்	10 வருடங்களுக்கு மேல்
மின்சார வேலைகள்	05 வருடங்களுக்கு மேல்
அலுவலக உபகரணம்	10 வருடங்களுக்கு மேல்
தளபாடங்களும் பொருத்துகைகளும்	10 வருடங்களுக்கு மேல்
கணினி உபகரணம்	04 வருடங்களுக்கு மேல்
அருவச் சொத்துக்கள்	04 வருடங்களுக்கு மேல்

(உ) இனங்கண்ட சொத்தினை நீக்குதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றானது, கையுதிர்ப்பின் பேரில் அல்லது அதன் பாவனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எவையும் எதிர்பார்க்கப்படாத போது, இனங்காணலிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்துக்களின் நீக்கம் தொடர்பான ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது, அச் சொத்தானது இனங்காணலிலிருந்து நீக்கப்படும் ஆண்டிலுள்ள விஸ்தீரண வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

1.2.2 நடைபெறும் மூலதன வேலை

மூலதன நடைபெறும் வேலையானது கிரயத்தில் எடுத்துரைக்கப்படும். மூலதனமாக்கலினை எதிர்பார்த்து கட்டடங்களின் நிர்மாணிப்பில் நேரடியாக உணரப்படும் மூலதன நோக்கம் ஒன்றினைக் கொண்ட செலவினங்களே இவையாகும். மூலதன நடைபெறும் வேலையானது, அது பாவனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் பொழுது, அதாவது கம்பனியினால் உத்தேசிக்கப்பட்ட விதத்தில் தொழிற்படும் ஆற்றலினை இது கொண்டிருப்பதற்கு தேவையான அமைவிடம் மற்றும் நிலையில் உள்ள போது, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உரிய சொத்து வகைக்கு மாற்றப்படும். மூலதன நடைபெறும் வேலையானது ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து, கடன்பெறும் செலவுகள் உள்ளடங்கலாக, கிரயத்தில் எடுத்துரைக்கப்படும். எடுத்த விலையில் குறிப்பிடப்படும்.

1.2.3 அருவச் சொத்துக்கள்

ஓர் அருவச் சொத்தானது, அச் சொத்தின் பண்பினைக் கொண்ட எதிர்கால பொருளாதார நன்மைகளானவை நிறுவனத்திற்கு ஏற்படுவதுடன் அச் சொத்தின் கிரயமானது இலங்கை கணக்கீட்டு நியமம் 38 - அருவச் சொத்துக்கள் என்பதற்கு இணங்க நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால், அது இனங்காணப்படும். அதற்கிணங்க, திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து கிரயத்தில் நிதி நிலமைக் கூற்றில் இச் சொத்துக்கள் எடுத்துரைக்கப்படும்.

கணனி மென்பொருளானது நேர்கோட்டு முறையில் 4 வருட காலப்பகுதி ஒன்றுக்கு கடனழிவு செய்யப்படுகின்றது.

கல்வித்திட்ட அபிவிருத்திக் கிரயமானது 4 வருட காலப்பகுதி ஒன்றுக்கு நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றது.

1.2.4 இருப்பு ஆவணங்கள்

காலங்கடந்த மற்றும் மெதுவாக விற்பனையாகி நகரும் பொருட்களை உரிய பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட பின்னர், சராசரிக் கிரயத்தில் இருப்புக்கள் விலைமதிக்கப்படுகின்றன. அதன் போது முதலில் பெற்றதை முதலில் வெளியேற்றல் (FIFO) முறைக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் இருப்புக்கள் விற்கப்படக்கூடிய விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

இருப்புக்களை அதன் தற்போதய அமைவிடத்திற்கும் நிலமைக்கும் கொண்டுவருவதில் ஏற்படும் கிரயமானது பின்வரும் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது:-

மூலப் பொருட்கள்	-	கொள்வனவு விலைக்கு
நடைபெறும் வேலை	-	கொள்வனவு விலைக்கு
முடிவுப் பொருட்கள்	-	நேரடி மூலப் பொருட்கள், நேர்க் கூலி ஆகியவற்றின் கிரயத்தில் சாதாரண தொழிற்பாட்டின் அடிப்படையில் நிலையான உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதாசாரம்

மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

1.2.5 சொத்துக்களின் குறைவு

சொத்துக் குறைவு பற்றிய ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என்பதை வரையறுப்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின், அதன் பின்னர் சொத்துக்களை மீளப்பெறக்கூடிய தொகையானது மதிப்பிடப்படுகின்றது. சொத்து ஒன்றின் கொண்டு செல்லல் தொகை அல்லது காசினை உண்டுபண்ணும் அலகானது அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் பார்க்க அதிகரித்தால் குறைவுறு நட்டம் ஒன்று இனங்காணப்படும். மீளப்பெறக்கூடிய தொகையினை வரையறுப்பதற்கு பாவிக்கப்படும் மதிப்பீடுகளில் மாற்றமொன்று இருந்திருப்பின் குறைவுறு நட்டமானது நீக்கப்படும் (மறுதலையாக்கப்படும்).

1.2.6 நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39
இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இனது நோக்கெல்லைக்குள் நிதிச் சொத்துக்களானவை இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள், முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக அல்லது பொருத்தமுடையதாக, பயனுறுதி

வாய்ந்த பாதுகாப்பு ஒன்றில் பாதுகாப்பு ஆவணங்களாக குறித்தொதுக்கப்பட்டு பெறப்பட்டனவாக வகைப்படுத்தப்படும். கம்பனியானது ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது.

சகல நிதிச் சொத்துக்களும், சொத்துகள் என்னும் பட்சத்தில் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது, கொடுக்கல் வாங்கலுக்கு நேரடிக் காரணமாயிருந்த செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றது.

கடன்களும் வருமதிகளும் வைப்புக்களும் எத்திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே கம்பனியானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் குறித்தொதுக்கப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக), கம்பனியானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

நிதிச் சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முடிவடையும் போது அல்லது நிதிச் சொத்தின் உரிமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் சகலதும் மாற்றப்படும் கொடுக்கல் வாங்கல் ஒன்றிலுள்ள நிதிச் சொத்துத் தொடர்பான ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை கம்பனி மாற்றும் போது கம்பனியானது அச் சொத்தினை இனங்காணலிலிருந்து நீக்குகின்றது. கம்பனியினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்ட, மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களிலான ஏதேனும் வட்டியானது வேறானதோர் சொத்து அல்லது பொறுப்பாக இனங்காணப்படும்.

கம்பனியானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினை பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை நிதி நிலமைக் கூற்றில் முன்னளிக்கப்படும்.

கம்பனியின் நிதிச் சொத்துக்களானவை காசு மற்றும் குறுங்கால முதலீடுகள் அத்துடன் வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

(அ) இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்கும் அல்லது மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக நிதிச் சொத்துக்கள் கொள்ளல் செய்யப்படுவதனால் வியாபாரத்திற்கு வைக்கப்படுவனவாக அவை வகைப்படுத்தப்படுகின்றன.

முழுமொத்த விரிவான வருமானக் கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவினத்தில் இனங்காணப்பட்ட உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களுடன் சேர்த்து உண்மைப் பெறுமதியிலான நிதி நிலமைக் கூற்றில் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் கொண்டுவரப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

(ஆ) கடன்களும் வருமதிகளும்

செயலூக்கமிக்க சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களாக கடன்களும் வருமதிகளும் காணப்படும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (**EIR**) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அத்தகைய நிதிச் சொத்துக்கள் பின்னர் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (**EIR**) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பிலான ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கலினைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (**EIR**) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் 'நிதி வருமானத்தில்' உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் முழுமொத்த வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

வியாபார வருமதிகள், ஊழியர் கடன்கள், வைப்புக்கள், முற்பணங்கள், ஏனைய வருமதிகள் மற்றும் காசும் காசுக்குச் சமமான விடயங்களும் ஆகியவற்றை கடன்களும் வருமதிகளும் உள்ளடக்குகின்றன.

(இ) முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிக் காலத்தையுடைய நிதிச் சொத்துக்கள் என்பன கம்பனியானது அவற்றை முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதற்கான சாதகமான உத்தேசம் மற்றும் ஆற்றலினைக் கொண்டுள்ள போது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (**EIR**) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துகள் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (**EIR**) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் 'நிதி வருமானத்தில்' உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் முழுமொத்த வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களிலான முதலீடுகளானவை முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்து முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக குறித்தொதுக்கப்பட்ட அல்லது மேற்போந்த நிதிச் சொத்துக்களின் எந்தவிதமான வகுதிக்குள்ளும் வகைப்படுத்தப்படாத பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களே விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப இனங்காணலின் பின்னர், அவை உண்மைப் பெறுமதியில் அளவிடப்படும் அத்துடன் குறைவுறு நட்டங்களினை விட அதன்கண்ணுள்ள மாற்றங்களானவை ஏனைய முழுமொத்த வருமானத்தில் இனங்காணப்பட்டு நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் ஒதுக்கப்பட்ட உண்மைப் பெறுமதியில் முன்னளிக்கப்படும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான கடன் ஆவணங்கள் தொடர்பான வட்டி வருமானமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (**EIR**) முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும். முதலீடு ஒன்றானது இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் திரளும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்படும்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான முதலீடாக ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 நிதிக் கருவிகள்

நிதிக் கருவிகள் என்பது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 க்குப் பதிலாக நிதிக் கருவிகள் எனும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 பதிலீடாகும் : வகைப்படுத்தல் மற்றும் மதிப்பிடுதல், குறைவடைத்தல் மற்றும் சேதம் ஏற்படுதல் (ஹேஜ்) கணக்கீடு எனும் நிதிக் கருவிகளுக்கு மூன்று துறைகளையும் ஒன்றாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 01 திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் வரடாந்த காலப் பிரிவுகளுக்கு அடையாளம்காணல் மற்றும் மதிப்பிடுதல்.

சபையானது, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 ஐ அனுமதித்துக்கொண்டது முன்பிருந்த முறையைப் பயன்டுத்தியாகும். மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதே கம்பனியின் முடிவாகும்.

வகைப்படுத்தலும் மதிப்பிடலும்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 இன் கீழ் கிடைக்க வேண்டிய வர்த்தக நிதி தவிர, கம்பனியின் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே நிதிச் சொத்தொன்று மதிப்பிடப்படுவது அதன் சாதாரண பெறுமதிக்காகும். மேலும், மதிப்பீடு செய்யப்படுவது இலாபம் அல்லது நட்டத்தின் கொடுக்கல் வாங்கல் கிரயத்தினூடாக சாதாரண பெறுமதி மீது கணக்கிடப்படாத நிதிச் சொத்துக்கள் தொடர்பிலாகும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 இன் கீழ் கடன் நிதிக் கருவிகள், இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சாதாரண பெறுமதியின் மீதும் கடனழிப்புச் செய்யப்பட்ட கிரயம் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதி மீதும் பின்னர் அளவிடப்படும். இந்த வகைப்பாடு, இரண்டு நியதிகள் மீது உள்ளது. அதாவது, சொத்து முகாமைத்துவத்திற்கான கம்பனியின் வியாபார மாதிரி மீது மற்றும் கருவிகளின் ஒப்பந்த ரீதியான நிதிப் பாய்ச்சல், எஞ்சியுள்ள "ஆரம்ப தொகையின் மீது மற்றும் வட்டித் தொகையை மாத்திரம் செலுத்துதல்" என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தல் என்பதன் மீதுமாகும்.

2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி ஆரம்பமாக விண்ணப்பிக்கும் திகதியளவில் நிறுவனத்தின் வியாபார மாதிரி மதிப்பீடு செய்யப்படுவதோடு, பின்னர் அது 2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் அடையாளம் காணப்படாத நிதிச் சொத்துக்கள் கடந்த காலத்திற்கு ஏற்புடையவாறு பயன்படுத்தப்படும். கடன் கருவிகளின் மீது ஒப்பந்த நிதிப் பாய்ச்சல்களை மதிப்பீடு செய்தல், ஆரம்ப தொகை மற்றும் வட்டித் தொகைகளைக் கொண்டு மாத்திரம் அமைந்திருப்பது சொத்துக்களின் ஆரம்ப அடையாளத்தின் போது வழங்கப்படும் விடயங்களின் அடிப்படையிலாகும்.

கம்பனியின் நிதிப் பொறுப்புக்களுக்கான கணக்கீடு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இன் கீழ் உள்ளவாறே காணப்படும்.

1.2.7 நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்

ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இக் கம்பனியானது மதிப்பிடுவதுடன் அத்தகைய குறைவானது நிகழ்ந்திருந்தால் அக் குறைவுறு தொகையானது சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையில் வேறுபாட்டினைக் கருத்திற்கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 நிறைவேற்றப்பட்டதன் மூலம், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இல் ஏற்பட்ட இழப்பு தொடர்பான அணுகுமுறை தொடர்பான பிரவேசத்திற்குப் பதிலாக எதிர்கால நோக்குடன் கடன்- இழப்பு அணுகுமுறை மிள்நிறுவப்பட்டதன் மூலம் நிதிச் சொத்துக்களுக்கான பாதிப்பு, நட்டங்கள் குறித்த நிறுவனத்தின் கணக்கீடு அடிப்படையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து கடன்கள் மற்றும் ஏனைய கடன் நிதியளிப்பு சொத்துக்களுக்கு இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான மதிப்பில் பராமரிக்கப்படாத எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கு ஒரு குறிப்பிட்ட கொடுப்பனவை ஒதுக்கிவைக்க இலங்கையின் கணக்கீட்டு நியமங்கள் 9 மூலம் பணிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு என்பது ஒப்பந்தத்தின்படி ஒப்பந்த பணப்புழக்கத்திற்கும் நிறுவனத்தை அடைய எதிர்பார்க்கப்படும் அனைத்து பணப்புழக்கத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டது. ஏதேனும் குறைபாடு இருப்பின் அது சொத்துகளின் அசல் பயனுள்ள வட்டி விகிதத்திற்கு அண்ணளவாக கழிவு செய்யப்படுகின்றது.

வர்த்தகம் மற்றும் பிற வருமதிகளுக்கான நிலையான அணுகுமுறை நிறுவனத்தால் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள், அவற்றின் வாழ்நாளில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் அடிப்படையில் கணக்கிடப்படல் வேண்டும்.

1.2.8 காசும் காசுக்குச் சமமான விடயங்களும்

கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள வைப்புக்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமான விடயங்களும் உள்ளடக்குகின்றது.

1.3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

கேள்வியின் பேரிலான கொடுப்பனவிற்கு அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் நிலுவையாகவுள்ளவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புக்களாகும். அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறை சாராத (நிலையான) பொறுப்புக்களாகும்.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறிந்த சகல பொறுப்புக்களும் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கம்பனியானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் இனங்காணப்படுகின்றன அத்துடன் பொருளாதார நலன்களின் வெளிப் பாய்ச்சலானது இக்கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது.

1.3.1 ஊழியர் நலன்கள்

(அ) ஓய்வூதியப் பணிக்கொடை ஏற்பாடு

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 19 நிறுவனத்தினால் பின்பற்றப்பட்டுள்ளது. அத்தோடு, நிறுவனத்தின் ஓய்வூதிய நலன் பொறுப்பின் தற்போதைய பெறுமதிக்கு நம்பகமான மதிப்பீட்டை உருவாக்கும் பொருட்டு கருத்திட்ட அலகுக் கடன் திட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்பாட்டினை கணிப்பீடு செய்வதற்காக பாவிக்கப்படும் அடிப்படை எடுகோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

கழிவிடப்பட்ட வீதம்	12%
எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம்	10%
பணியாட்டொகுதிப் புறழ்வு	02%
ஓய்வுபெறல் வயது	55 வருடங்கள்

தொடர்ந்து செல்லும் வர்த்தக கம்பனியாக இக் கம்பனியானது தொடரும்.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

நிறுவனம் ஒன்றானது தனியான நிறுவனம் ஒன்றாக நிலையான பங்களிப்பினைச் செலுத்துவதும் அத்துடன் மேலதிக தொகை ஒன்றினைச் செலுத்துவதற்கான சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கொண்டிராததுமான தொழிலுக்குப் பின்னரான திட்டம் ஒன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்களுக்கான கடப்பாடுகளானவை, அவை நிலுவையிலுள்ள போது, முழுமொத்த வருமானக் கூற்றில் செலவு ஒன்றாக இனங்காணப்படும்.

(இ) ஊழியர் சேமலாப நிதியம்

அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் கம்பனியும் ஊழியர்களும் முறையே **12%** இனையும் **08%** இனையும் 2019 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் வரையில் பங்களிப்புச் செய்கின்றனர்.

(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் **3%** இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

1.3.2 வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள்

வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகளானவை கிரயத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது.

1.3.3 வரி விதிப்பு

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூலம் 2018.04.01 ஆம் திகதி முதல் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வருமான வரிகளும் இதில் அடங்கும். சட்டத்தில் முன்மொழியப்பட்ட மாற்றங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பொருள்கோடப்படுவது திரட்டு நிதியில் இருந்து பாராளுமன்றத்தால் செலவுத் தலைப்பு இடப்பட்ட செலவினங்களிலிருந்து அல்லது அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட எந்தவொரு கடனிலிருந்தும் எந்தவொரு அரசாங்க கூட்டுத்தாபனமும் பெறும் எந்தவொரு பணமும்

2018.04.04 ஆம் திகதியிலிருந்து வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். மேலும் குறிப்பு 1.7 ஐப் பார்க்கவும்.

1.3.4 பிற்போடப்பட்ட வரி

2007 ஆம் ஆண்டின் 24 இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அமைய வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதனால் இக் கம்பனியின் மிகை மற்றும் வருமானமாக, பிற்போடப்பட்ட வரிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.5 மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்

நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளினால் அல்லது பொருளாதார நலன்களின் மாற்றமானது சாத்தியப்படக்கூடியதாகவில்லாத அல்லது நம்பகரமாக மதிப்பிடப்படக்கூடியதாகவில்லாத நிகழ்கால கடப்பாடுகளின் மூலம் மாத்திரமே அவற்றின் இருப்பு உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகளாக எதிர்பாராத பொறுப்புக்கள் உள்ளன.

இக் கம்பனியின் மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களின் உரிய குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.4 விரிவான வருமானக் கூற்று

மூலதன ஒதுக்கு – (மூலதனக் கொடைகளுடன் தொடர்புபட்டவை)

சுகாதார அமைச்சு, கெயார் (CARE) மற்றும் வரையறுக்கப்பட்ட சிலோன் புகையிலைக் கம்பனி ஆகியவற்றினால் வழங்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டிலிருந்து நிதிச் சொத்துக்கள் மீது செலவழிக்கப்படும் நிதியங்கள் மூலதனக் கொடைகளாக கருதப்பட்டுள்ளன ஆதலால் இவ் உருப்படிகள் மீதான பெறுமானத் தேய்வானது, அத் தேய்வினை ஆண்டுக்கான மொத்த தேய்வுக் கட்டணத்திற்கு எதிராக ஈடாக்கும் அதேவேளை உரிய மூலதன கொடைக் கணக்குகளில் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

1.4.1 மானியக் கொடை

அரசாங்க மானியக் கொடைகளானவை, அக்கொடையானது பெற்றுக்கொள்ளப்பட்டு அதனுடன் இணைந்த சகல நிபந்தனைகளும் இணங்கியொழுகப்படும் என்னும் நியாயமான உறுதிப்பாடு காணப்படுமிடத்து, இனங்காணப்படும்.

உறப்பட்ட செலவுகளுக்காக இக் கம்பனிக்கு இழப்பினை ஈடுசெய்யும் கொடைகளானவை, செலவுகள் இனங்காணப்படும் அதே காலப்பகுதியில் முழுமொத்த வருமானக் கூற்றில் வருமானமாக இனங்காணப்படும். சொத்து ஒன்றின் செலவுக்காக இக் கம்பனிக்கு இழப்பினை ஈடுசெய்யும் கொடைகளானவை நிதி நிலமைக் கூற்றில் இனங்காணப்படும்.

1.4.2 செலவினம்

(அ.) உறப்படும் செலவுக்கும் குறித்த வருமான உருப்படிகளின் உழைப்புக்கும் இடையிலான நேரடி இணைப்பின் அடிப்படையில் முழுமொத்த வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படும். இக் கம்பனியினை நடாத்துதல் மற்றும் வினைத்திறனான நிலையில் மூலதனச் சொத்துக்களைப் பராமரித்தல் ஆகியவற்றில் உள்ளாகும் சகல செலவினங்களும் ஆண்டிற்கான மிகையினை அடையும் வருமானத்துக்கு எதிராகச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

1.4.3 நிதிச் செலவினம்/ வருமானம்

முதலீடு செய்யப்பட்ட நிதியங்களின் மீது அட்டுறு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியினை நிதி வருமானம் உள்ளடக்குகின்றது.

1.5 காசுப் பாய்ச்சல் கூற்று

கணக்கீட்டு நியமங்கள் 7 இற்கிணங்க காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

1.6 அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னர் நிகழும் நிகழ்வுகளின் அடிப்படையான விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவசியமானவிடத்து, பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

1.7 புதிய கணக்கீட்டு நியமங்கள், திருத்தங்கள் மற்றும் பொருள்கோடல்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள், 2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அமுலிலுள்ள புதிய நியமங்களை ஏற்றுக்கொள்வதைத் தவிர, கடந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுடன் இணங்குகின்றன. ஏற்கனவே வழங்கப்பட்ட ஆனால் இன்னும் நடைமுறையில் இல்லாத வேறு எந்த நியமங்கள், பொருள்கோடல்கள் அல்லது திருத்தத்தையும் நிறுவனம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

(i) "நிதிக் கருவிகள்: அடையாளப்படுத்தல் மற்றும் மதிப்பிடல்." எனும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இன் தரநிலையானது பல வகைப்பாடு மற்றும் அளவீட்டு மாதிரிகளால் மாற்றப்பட்டு ஆரம்பத்தில் இரண்டு வகைகளை மட்டுமே கொண்டிருந்தது. அதாவது, கடனழிப்புச் செலவு மற்றும் சாதாரணப் பெறுமதி எனக் காணப்பட்ட ஒற்றை மாதிரி இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 எனும் "நிதிக் கருவிகள்." பதிலீடுசெய்யப்பட்டுள்ளது.

(ii) பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான ஒப்பந்தங்களை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 18 மற்றும் கட்டுமான ஒப்பந்தங்களை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 11 க்குப் பதிலாக, "வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களின் மூலம் கிடைக்கும் வருமானம்." என்ற இலங்கை கணக்கீட்டு இலக்கம் 15 எனும் நியம்ம் பதிலீடுசெய்யப்பட்டுள்ளது. புதிய நியமம் ஒரு தயாரிப்பு அல்லது சேவையின் கட்டுப்பாட்டை வாடிக்கையாளருக்கு வழங்கும்போது வருமானத்தை அடையாளம் காணல் எனும் அடிப்படையில் அமைந்துள்ளது. எனவே கட்டுப்பாடு என்ற கருத்து தற்போதுள்ள அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் எனும் கருத்தில் பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) இலங்கை நிதி அறிக்கை முறைமை 1, அதாவது, இலங்கை கணக்கீட்டு நியமங்களை முதலில் கடைப்பிடித்தல், இலங்கை நிதி அறிக்கை முறைமை 7, அதாவது நிதிக் கருவிகளை வெளிப்படுத்தல் மற்றும் இலங்கை நிதி அறிக்கை முறை 19, அதாவது "ஊழியர் நலன்கள்" மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் முறை 10, அதாவது "இணைந்த நிதிக் கூற்றுக்களுக்கு" இனியும் பொருந்தாத திருத்தங்கள், இடைநிலை விதிகளை உள்ளடக்கிய தொடர்புடைய குறுகிய கால விலக்களிப்புகள் குறைக்கப்படுகின்றன.

(iv) இலங்கை நிதி அறிக்கையிடல் முறை 16, அதாவது "குத்தகை" அடிப்படையாக குத்தகைதாரரால் செய்யப்படும் கணக்கீட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றும் நிதி நிலமை அறிக்கையின் அடிப்படையில் கிட்டத்தட்ட அனைத்து குத்தகைகளையும் அடையாளம் காண முடியும். செயற்பாட்டு மற்றும் நிதிக் குத்தகைக்கு இடையே உள்ள தற்போதைய வேறுபாட்டை நியமம் நீக்குகின்றது. ஒரு சொத்தை (குத்தகைக்கு விடப்பட்ட பொருளைப் பயன்படுத்துவதற்கான உரிமை) அடையாளம் காண்பதும் மிக முக்கியமாக, அனைத்து குத்தகைகளுக்கும் வாடகை செலுத்துவதற்கான நிதிப் பொறுப்பு. குறுகிய கால மற்றும் குறைந்த மதிப்புள்ள குத்தகைகளுக்கு மாற்று விலக்களிப்புகள் உள்ளன.

இலங்கை நிதி அறிக்கையிடல் முறைமை 16 மூலம் குத்தகையை அடையாளம் காணல், அளவீடுசெய்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றின் அடிப்படைகள் விரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 17 இன் கீழ் "குறைந்தபட்ச மதிப்புள்ள" 12 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குத்தகை காலம் கொண்ட குறுகிய காலத்திற்கான சில விடுவிப்புக்கள் தவிர, நிதிக் குத்தகைக் கணக்கியல் போன்ற ஐந்தொகை மாதிரியின் கீழ் அனைத்து குத்தகைதாரர்களும் கணக்கு வைக்க வேண்டியது அவசியமாகும். இந்த நியமம் 2019 ஜனவரி 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பிறகு ஆரம்பிக்கும் ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.

(v) பகுதிகளாக வகையீடு செய்யப்பட்ட நிதிக் கருவிகளுக்கு பங்கிலாபத்தின் மூலம் நிகழும் வரி விளைவுகளை அடையாளம் காணவேண்டியது பகிர்ந்தளிக்க முடியுமான இலாபத்தை உழைக்க முடியுமான கடந்தகால கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நிகழ்வுகளின் அடிப்படையில் அடையாளம் காணும் போது என இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 12 ஆன "வருமான வரி" நியமத்தில் திருத்தங்களினூடாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஏற்புடைய நியமத்தையொட்டிய மேம்படுத்தல்கள் 2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் கணக்கீட்டு காலப்பிரிவுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

(vi) ஏதேனும் ஏற்புடைய தகுதியை அடையும் சொத்தொன்று அதன் உத்தேச பயன்பாட்டுக்காகவோ அல்லது விற்பனைக்காகவோ தயார்படுத்தப்பட்ட பின்னர் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கடன் பெறுகை செலத்தப்படாது நிலுவையாக உள்ள போது அது சாதாரண கடன் பெறுகையின் ஒரு பகுதியாக மாறுமென இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 23 "கடன்பெறும் கிரயத்தை" ஒட்டி மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஊடாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. ஏற்புடைய நியமத்தின் மேம்படுத்தல்கள் 2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் கணக்கீட்டு காலப்பிரிவுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

(vii) இலங்கை நிதி அறிக்கையிடல் முறை 3, அதாவது "வியாபார கூட்டிணைப்பு" என்பதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டிருப்பது ஒன்றிணைந்த செயற்பாடான வியாபாரமொன்றின் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொள்ள கட்டங்கள் அடிப்படையில் அடைந்துகொள்ளும் வியாபார கூட்டிணைப்பு என்பதாகும். நியமத்தின் மேம்படுத்தல்கள் 2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் கணக்கீட்டு காலப்பிரிவுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 12, அதாவது "வருமான வரி" தவிர்ந்த பிரகடனப்படுத்தப்பட்ட தரங்களுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களைப் பின்பற்றுவதன் மூலம் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எண்ணிக்கை ரீதியான தாக்கம் நிகழக்கூடுமென உத்தேசிக்கப்படவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 12, அதாவது "வருமான வரியின்" தாக்கம் மேலும் மதிப்பிடப்பட்டு வருகின்றது. அது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டங்களின் போது கலந்துரையாடி அதனூடாக பரிசீலனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். பயனற்ற வேறு நியமங்கள் வேறு கிடையாது. தற்போதைய அல்லது எதிர்கால அறிக்கையிடலின் போது மற்றும் அண்மைக் காலத்தில் நிகழ முடியுமான எதிர்கால கொடுக்கல் வாங்கல்கள் கம்பனி மீது பூரிய தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்ப்பார்க்கப்படவில்லை.

1.8 விற்பனைக்கான நடைமுறை சாராத சொத்துக்கள்

தொடர்ந்து பாவிப்பதை விட முதற்படியாக கையுதிர்த்தல் ஒன்றுக்கூடாக மீளப்பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடைமுறை சாராத சொத்துக்களானவை விற்பனைக்கு வைத்திருக்கப் படுபவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்படுவதற்கு உடன் முன்னர், இச் சொத்துக்களானவை இக் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க மீள அளவிடப்பட்டுள்ளன. அதன் பின்னர், இச் சொத்துகளானவை அவற்றின் கொண்டு செல்லல் தொகை மற்றும் விற்பனைக்கான கிரயம் கழித்த உண்மைப் பெறுமதி ஆகியவற்றிலும் குறைவாக அளவிடப்படுகின்றன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுவதான ஆரம்ப வகைப்படுத்தல் மீதான சொத்துக் குறைவுறு நட்டங்கள் மற்றும் மீள் அளவீட்டின் பேரில் அடுத்துவரும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் என்பன இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளன. ஏதேனும் திரண்ட குறைவுறு நட்டத்தினை விடக் கூடுதலாக இலாபங்கள் இனங்காணப்படுவதில்லை.

1.9 வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ லிமிடட் நிறுவனத்திற்கு ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலான பகுப்பாய்வு

இலக்கு 2 : பூச்சிய பட்டினி

பட்டினியை முடிவுக்கு கொண்டுவரல், உணவுப் பாதுகாப்பை அடைந்துகொள்ளல் மற்றும் போஷாக்கை மேம்படுத்தல் மற்றும் பேண்தகு விவசாயத்தை ஊக்குவித்தல்.

2.1 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

2030 ஆம் ஆண்டளவில் பட்டினியை முடிவுக்கு கொண்டு வந்து அனைத்து மக்களுக்கும் விசேடமாக வறியவர்களுக்கு மற்றும் பிள்ளைகள் உள்ளிட்ட அபாய நிலைமைக்கு உட்படக்கூடிய ஆட்களுக்கு வருடம் பூராகவும் பாதுகாப்பான போஷாக்குள்ள மற்றும் போதியளவு உணவு வழங்குவதை உறுதிப்படுத்தல்.

2.1.1 குறிகாட்டி

போஷாக்கின்மை பரவுதல்.

2.2 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

2025 ஆம் ஆண்டளவில் 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் வளர்ச்சி குன்றுதல் மற்றும் போஷாக்கின்மை தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட

இலக்குகளை அடைந்துகொள்ளல் அடங்களாக 2030 ஆம் ஆண்டளவில் அனைத்துவிதமான போஷாக்கின்மைகளையும் முடிவுக்கு கொண்டுவரல் மற்றும் பூப்பெய்திய பெண் பிள்ளைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார் மற்றும் முதியோர்கள் ஆகியோரின் போஷனைத் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்தல்.

2.2.1 குறிகாட்டி

5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு மத்தியில் வகைக்கு அமைய (போஷாக்கின்மை மற்றும் அதிகூடிய நிறை) போஷாக்கு குறைபாடு (உயரத்திற்கமைய நிறை >+2 அல்லது <-2 நியம விலகல் - உலக சுகாதார அமைப்பின் பிள்ளைகளின் வளர்ச்சித் தரங்களின் சராசரிக்கு அமைய) பரவிக் காணப்படல்.

2.3 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

காணி, ஏனைய உற்பத்தி வளங்கள் மற்றும் உள்ளீடுகள், அறிவு, நிதிச் சேவைகள், சந்தை மற்றும் பெறுமதி சேர்த்தல் மற்றும் பண்ணை அல்லாத தொழில்களுக்கான சந்தர்ப்பம் போன்றவற்றினூடாக அவற்றுக்குப் பாதுகாப்பான மற்றும் சமமான பிரவேசத்தை வழங்குதல் உள்ளிட்ட 2030 ஆம் ஆண்டளவில், சிறு அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் விசேடமாக பெண்கள், ஆதிக் குடிகள், விவசாயக் குடும்பங்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் ஆகியோரின் விவசாய உற்பத்தித்திறனையும் வருமானத்தையும் இரட்டிப்பாக்கல்.

2.3.1 குறிகாட்டி

பாலுனர்வு மற்றும் உள்நாட்டு நிலமைக்கு அமைய, சிறு அளவிலான உற்பத்தியாளர்களின் சராசரி வருமானம்.

இலக்கு 9 : கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்

தாக்குப் பிடிக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல், ஒருங்கிணைந்த மற்றும் நிலைபேறான கைத்தொழிலாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கங்களை போஷித்தல்.

9.2 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

ஒருங்கிணைந்த மற்றும் நிலைபேறான கைத்தொழிலாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் தேசிய நிலமைக்கு அமைவாக கைத்தொழில் துறையில் தொழில்வாய்ப்பு பகுதியை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை குறிப்பிட்டளவு அதிகரித்தல் மற்றும் குறைவிருத்தி நாடுகளில் அதன் பங்கை இரட்டிப்பாக்கல்.

9.2.1 **குறிகாட்டி**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியினதும் ஆளுக்குரிய வருமானத்தின் விகிதாசாரமாக உற்பத்திப் பெறுமதி சேர்த்தல்.
- மொத்த ஊழியர் படையின் சதவீதமாக தொழில் உருவாக்கம்.

9.4 **ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு**

2030 ஆம் ஆண்டளவில் அனைத்து நாடுகளும் தமது ஆற்றலுக்கு அமைய செயற்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மீளுருவாக்க கைத்தொழில் வளர்ச்சி, வளப் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் சுத்தமான மற்றும் சூழல்

நேயமிக்க தொழில்நுட்பத்தையும் கைத்தொழில் செயற்பாடுகளையும் கூடுதலாகப் பயன்படுத்தல்.

9.4.1 **குறிகாட்டி**

பெறுமதி சேர்க்கப்பட்ட அலகுக்கு CO2 வெளியேற்றம்

9.5 **ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு**

2030 ஆம் ஆண்டளவில் புத்தாக்கங்களை ஊக்குவித்தல் மற்றும் அரசாங்க மற்றும் தனிப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்கான ஆய்வுகள்

மற்றும் அபிவிருத்தி ஊழியர்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டளவு அதிகரித்தல் உள்ளிட்ட 2030 ஆம் ஆண்டளவில் விசேடமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் விஞ்ஞான ஆய்வுகளை விருத்தி செய்தல், கைத்தொழில் துறையில் தொழில்நுட்ப ஆற்றல்களை விருத்திசெய்தல்.

9.5.1 **குறிகாட்டி**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவிகிதமாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்களை மேம்படுத்தல்.
- ஒரு மில்லியன் குடித்தொகைக்கு ஏற்றவாறு ஆராய்ச்சியாளர்கள் (முழுநேர சமமான)

இலக்கு 12 : பொறுப்புணர்வுடனான பாவனை மற்றும் உற்பத்தி

நிலைபேறான பாவனை மற்றும் உற்பத்திப் போக்குகளை உறுதிசெய்தல்.

12.5 **ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு**

2030 ஆம் ஆண்டளவில், தடுத்தல், குறைத்தல், மீள்சுழற்சி மற்றும் மீள்பாவனை ஊடாக கழிவு உருவாக்கத்தை முடியுமான அளவு குறைத்தல்.

12.5.1 **குறிகாட்டி**

தேசிய மீள்சுழற்சி வீதம், மீள்சுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் டொன் அளவு.

12.7 **ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு**

தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு அமைய நிலைபேறான அரசாங்க பெறுகை நடைமுறைகளை மேம்படுத்தல்.

12.7.1 **குறிகாட்டி**

நிலைபேறான அரசாங்க கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நாடுகளின் எண்ணிக்கை.

12 அ. **ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு**

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மிகவும் நிலைபேறான பயன்பாடு மற்றும் அபிவிருத்திப் போக்குகளை நோக்கிப் பயணிப்பதற்காக அவர்களின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இயலளவை உறுதிப்படுத்த உதவுதல்.

12 அ. 1 **குறிகாட்டி**

நிலைபேறான பயன்பாடு மற்றும் அபிவிருத்தி மற்றும் சூழல் ரீதியில் சிறந்த தொழில்நுட்பத்திற்கான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்காக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு கிடைக்கும் நிதியுதவிகளின் அளவு.

	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
02. வருமானம்		
வருவாய்	2,441,399,694.98	2,215,278,047
தேய்மானம்	59,864,539.38	56,379,502
சுபோஷ விற்பனை	746,933,175.80	523,214,501
ஹைலன்ட் உற்பத்தி விற்பனை	19,222,565.24	10,773,160
தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் உற்பத்தி விற்பனை	584,232.00	672,070
SDK உற்பத்தி விற்பனை	880,860.00	400,850
பேக்கரி உற்பத்திகள்	2,494,590.00	-
	3,271,379,657.40	**2,806,718,130**
03. நுகர்வுக்கு தயார் நிலையிலுள்ள உற்பத்திச் செலவு		
2019.01.01 ஆம் திகதிக்கு நிறைவடைந்த உற்பத்திகள்	5,010,672.00	24,913,203
மொத்த உற்பத்திச் செலவு	2,465,813,916.09	2,210,858,725
2019.12.31 ஆம் திகதிக்கு நிறைவடைந்த உற்பத்திகள்	-	(5,010,672)
	2,470,824,588.09	**2,230,761,256**
04. விற்பனைச் செலவு		
2019.01.01 ஆம் திகதிக்கு மீதி	7,046,999.85	13,650,007
வருவாய் - சுபோஷ	539,945,170.17	369,851,071
விற்பனை ஹைலன்ட் உற்பத்தி	16,099,652.80	9,146,061
கொள்வனவு - தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் உற்பத்திகள்	459,095.69	539,113
கொள்வனவு - SDK உற்பத்திகள்	848,647.60	428,162
விற்பனை - பொதியிடல் பொருட்கள்	-	38,000,336
	564,399,566.11	**431,614,750**
2019.12.31 ஆம் திகதிக்கு மீதி	(17,715,888.87)	(7,047,000)
	546,683,677.24	**424,567,750**
05 ஏனைய வருமானம்		
விரைவான விற்பனை	23,849,965.00	22,558,357
வீட்டுக்கடன் வட்டி	2,121,729.35	1,294,269
திறைசேரி உண்டியல் மீதான வட்டி வருமானம்	7,649,201.92	7,012,927
நிலையான வைப்புக்களுக்கான வட்டி	6,784,204.29	5,130,951
வேறு	10,036,558.69	1,817,347
	50,441,659.25	**37,813,850**
06 விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்		
போக்குவரத்து அறவீடுகள்	11,138,959.64	14,107,436
காட்சிக்கூட செலவினங்கள்	2,049,939.23	294,040
அச்சிடல் மற்றும் விளம்பர செலவுகள்	6,342,990.40	4,005,373
விற்பனை கொமிஸ் மற்றும் ஏனைய செலவுகள்	715,628.77	56,137
தேய்மானம்	1,995,866.67	1,248,000
	22,243,384.71	**19,710,986**

	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
07. நிர்வாகச் செலவுகள்		
சம்பளம்	10,798,530.64	9,652,305
ஊழியர் சேமலாப நிதியம்	2,231,260.66	2,191,188
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	476,736.30	484,802
மேலதிகநேரம்	3,746,080.70	2,356,408
கொப்பனவுகள்	3,408,984.35	3,709,810
அமைய சம்பளம்	1,471,233.34	1,032,525
அமய சம்பளம் மீதான ஊழியர் சேமலாப நிதியம்	319,833.34	219,500
அமய சம்பளம் மீதானஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	47,975.01	32,925
முகாமைத்துவ கொடுப்பனவு	7,363,082.30	8,366,493
ஊழியர் நலன்புரி	3,560,591.45	3,050,092
வரி மற்றும் கூலி	381,300.71	518,941
அலுவலக உபகரண பராமரிப்பு	1,410,699.73	900,647
பாதுகாப்புக் கட்டணம்	8,484,859.30	7,375,734
மோட்டார் வாகனம் எரிபெருள்	3,706,756.75	2,782,471
பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு - வாகனம்	3,394,039.91	2,155,378
ஏனைய சேர்விஸ் பராமரிப்புகள்	13,500.00	-
கட்டிட பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்பு	597,345.00	-
தேனீர் மற்றும் பிற	21,455.00	-
காப்புறுதி	2,047,191.43	-
நிகழ்ச்சி முகாமைத்துவம்	33,078.00	-
காகிதாதிகள்	1,072,402.53	1,806,302
அஞ்சல் செலவுகள்	155,000.00	355,000
தொலைபேசிக் கட்டணங்கள்	521,406.50	550,013
ஊழியர் பயிற்சி	22,923,595.30	13,010,300
சட்ட மற்றும் தொழிற் கட்டணங்கள்	2,082,191.97	882,495
அனுபத்திர மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள்	1,159,791.65	1,043,117
சுகாதார மற்றும் நலத்துறை	518,454.99	532,508
பிரயாணச் செலவு	303,250.00	210,150
நன்கொடைகள்	284,475.00	940,000
MKT சீருடை	27,575.00	88,000
ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்	14,717,471.16	9,723,097
தேய்மானம்	5,520,198.83	6,075,434
	102,800,346.85	**80,045,635**
08 நிதி மற்றும் ஏனைய செலவுகள்		
வங்கிக் கட்டணங்கள்	1,065,642.79	53,191
ஏனைய செலவினங்கள்	68,580.25	-
அகற்றல் செலவு	-	10,639,533
மீள் தயாரிப்புச் செலவு	-	112,656
	1,134,223.04	**10,805,380**

	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
09 கொள்வனவு		
சோளம்	779,898,383.82	714,643,328
சோயா	757,894,660.95	512,146,729
பால்மா	272,480,000.00	373,102,650
கனியங்கள்	70,035,225.00	43,207,050
விற்றமின்	75,700,762.50	80,172,854
பொலித்தீன் பை	1,258,560.00	7,001,766
பொலித்தீன் ரீல்	67,634,039.84	50,890,355
கிராப்ட் காகிதப்பை	40,073,145.00	32,006,559
டுவைன்நூல்	233,090.81	233,082
	2,065,207,867.92	**1,813,404,373**
10 நேரடி உழைப்பு மற்றும் முகாமைத்துவ செலவுகள்		
சம்பளம்	70,984,547.94	61,853,762
ஊழியர் சேமலாப நிதியம்	11,995,861.08	9,744,726
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	2,699,368.74	2,434,629
மேலதிகநேரம்	54,507,254.60	48,162,231
விசேடகொடுப்பனவு	24,509,247.43	28,343,242
பணிக்கொடை	14,827,855.23	5,663,671
சேவைத் தள கொடுப்பனவு	599,263.14	429,854
சீருடைகள் மற்றும் சலவை	4,297,741.87	4,185,069
தேனீர் மற்றும் பிற	4,043,282.91	3,906,123
முறைமாற்ற மற்றும் உணவுக் கொடுப்பனவு	2,777,829.01	2,197,984
சுகாதார மற்றும் நலத்துறை	1,031,413.02	1,017,482
அமய மற்றும் ஒப்பந்த சம்பளம்	6,037,647.63	5,576,687
அமய மற்றும் ஒப்பந்த சம்பளம் மீதான ஊழியர் சேமலாப நிதியம்	1,036,934.66	878,297
அமய மற்றும் ஒப்பந்த சம்பளம் மீதானஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	246,502.99	204,391
ஊழியர் நலன்புரிச் செலவு	233,895.09	205,788
ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்	14,152,687.76	12,457,820
	213,981,333.10	**187,261,755**
11 தொழிற்சாலை மேந்தலைச் செலவுகள்		
மின் பிறப்பாக்கி எரிபெருள்	49,659,130.00	41,398,428
தொழிற்சாலை பராமரிப்புக் கட்டணம்	1,908,747.00	66,046
பொறி மற்றும் இயந்திரங்கள் பராமரிப்பு	43,292,341.99	22,777,451
ஆய்வுகூட செலவுகள்	3,664,359.73	3,678,311
மின்சாரம்	35,297,046.89	32,717,280
கட்டிட பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு	4,983,894.09	2,774,122
வேறு சேவைகள் மற்றும் பராமரிப்பு	11,624,957.92	8,250,043
பூங்கா பராமரிப்பு	200,512.50	58,880
மெலிப்பு நட்டம்	291,031.60	87,285
தேய்வு	54,455,917.24	50,340,691
	205,377,938.96	**162,148,537**

12 ஆதனம்" பொறித்தொகுதி" உபகரணம்

செலவு / மீள்மதிப்பு	2018.12.31 ஆம் திகதி மீதி	மிகை	2019.12.31 ஆம் திகதி மீதி
காணி	220,000,000	-	220,000,000.00
கட்டடம்	126,987,772	29,313,198.39	156,300,970.45
பொறிததொகுதிகளும இயநதிர சாதனங்களும்	443,660,637	28,423,707.71	472,084,345.14
மோட்டார் வாகனம்	30,495,000	11,272,000.00	41,767,000.00
உபகரணங்களும் கருவிகளும்	7,707,234	949,270.00	8,656,504.05
ஆய்வுகூட உபகரணங்கள்	7,976,757	1,669,645.54	9,646,402.41
மின்சார வேலைகள்	6,042,735	-	6,042,734.76
அலுவலக உபகரணங்கள்	8,553,690	2,299,160.17	10,852,849.92
தளபாடங்களும் பொருத்துகைகளும்	7,601,458	1,677,742.42	9,279,200.75
கணினி மற்றும் வன்பொருட்கள்	8,274,639	2,153,861.00	10,428,499.88
	867,299,922	77,758,585.23	945,058,507.36

திரண்ட பெறுமானத் தேய்வு	2018.12.31 ஆம் திகதி மீதி	வருடத்திற்கான கட்டணம்	2019.12.31 ஆம் திகதி மீதி
கட்டடம்	25,048,973	7,204,356.89	32,253,330.21
பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்	143,358,357	44,727,229.73	188,085,586.58
மோட்டார் வாகனம்	20,418,500	3,785,866.67	24,204,366.67
உபகரணங்களும் கருவிகளும்	5,607,000	749,903.51	6,356,903.25
ஆய்வுகூட உபகரணங்கள்	2,832,503	831,132.15	3,663,635.30
மின்சார வேலைகள்	3,540,461	989,997.66	4,530,458.96
அலுவலக உபகரணங்கள்	3,362,113	980,381.35	4,342,494.02
தளபாடங்களும் பொருத்துகைகளும்	3,079,945	814,496.85	3,894,442.01
கணினி மற்றும் வன்பொருட்கள்	4,294,200	1,723,321.03	6,017,521.22
	211,542,052	61,806,685.84	273,348,738.22

பதிவழிப்பு பெறுமதி	2018.12.31 ஆம் திகதி மீதி ரூபா. சதம்	2019.12.31 ஆம் திகதி மீதி ரூபா சதம்
காணி	220,000,000	220,000,000.00
கட்டடம்	101,938,799	124,047,640.24
பொறிததொகுதிகளும இயநதிர சாதனங்களும்	300,302,281	283,998,758.56
மோட்டார் வாகனம்	10,076,500	17,562,633.33
உபகரணங்களும் கருவிகளும்	2,100,234	2,299,600.80
ஆய்வுகூட உபகரணங்கள்	5,144,254	5,982,767.11
மின்சார வேலைகள்	2,502,273	1,512,275.80
அலுவலக உபகரணங்கள்	5,191,577	6,510,355.90
தளபாடங்களும் பொருத்துகைகளும்	4,521,513	5,384,758.74
கணினி மற்றும் வன்பொருட்கள்	3,980,439	4,410,978.66
	655,757,870	671,709,769.14

இலங்கை திரிபோஷ லிமிடட்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	2019.12.31 ஆம் திகதி மீதி ரூபா. சதம்	2018.12.31 ஆம் திகதி மீதி ரூபா சதம்
13. அருவச் சொத்துக்கள்		
செலவு	661,187.57	661,188
திரண்ட தேய்மானம்	661,187.57	495,891
பதிவழிப்பு பெறுமதி	-	165,297
14. நடைபெறும் வேலை		
கழுவும் அறை நிர்மாணம்	-	517,145
கராஜ் மற்றும் ஓய்வு அறை நிர்மாணம்	-	21,996,484
	-	22,513,629

15 இருப்பு பொருட்கள்	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
மூலப்பொருள்		
கோதுமை	10,541,192.69	16,845,955
சோயா	71,270,388.00	39,872
பால்மா	4,260,000.00	47,022,150
கனியங்கள்	10,193,150.00	4,074,650
விட்டமின்கள்	8,769,468.75	11,471,825
	105,034,199.44	**79,454,452**
பொதியிடல் மூலப்பொருட்கள்		
பொலித்தீன் பைகள்	-	277,020
பொலித்தீன் ரீல்	2,826,591.88	4,558,059
கிராப்ட் கடதாசி பைகள்	9,425,675.00	4,121,568
	12,252,266.88	**8,956,647**
வேறு		
டீசல்	2,747,160.00	3,138,130
பொறியியல் களஞ்சியம்	38,918,844.41	10,922,254
	41,666,004.41	**14,060,384**
செய்து கொண்டிருக்கும் வேலைகள்		
மூலப்பொருள்		
கோதுமை	1,207,400.00	10,858,791
சோயா	60,480.00	-
பால்மா	260,000.00	997,500
கனியங்கள்	65,037.50	72,518
விட்டமின்கள்	528,281.25	115,041
பொதியிடல் மூலப்பொருட்கள்		
பொலித்தீன் பைகள்	12,025.80	164,256
பொலித்தீன் ரீல்	55,381.70	155,064
கிராப்ட் கடதாசி பைகள்	3,543.28	242,402
டுவைன் நூல்	248.23	-
	2,192,397.76	**12,605,573**
முடிவுப் பெருட்கள்		
தாய்	-	2,927,068
சேய்	-	2,083,604
	-	**5,010,672**
சந்தைப்படுத்தல் பிரிவு		
சுபோஷ	274,571.52	856,169
பொதியிடல் மூலப் பொருட்கள்	16,782,678.43	5,846,978
ஹைலன்ட் உற்பத்தி	381,959.74	343,853
நடைபெறும் வேலை	276,679.18	-
	17,715,888.87	**7,047,000**
மொத்தம்	**178,860,757.36**	**127,134,727**

	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
16 வர்த்தகம் மற்றும் ஏனைய வரவேண்டியவைகள்		
கடனாளிகள்	27,625,102.35	146,994,281
கடனாளிகள் - விற்பனை	45,371,885.34	29,753,237
முற்பணம் மற்றும் முன் கொடுப்பனவு	52,564,653.92	181,000
காப்புறுதி வருமதிகள்	541,161.14	-
வைப்புக்கள்	2,026,000.00	1,976,000
வீட்டுக்கடன் - ஆதனக்கடன்	35,416,951.11	24,798,514
வீட்டுக்கடன் - இடர் கடன்	22,627,037.93	8,630,286
உற்சவ முற்பணம்	173,750.00	221,250
சுற்றுலா முற்பணம்	640,200.00	225,800
	186,986,741.79	212,780,368

16.1 முற்பணங்களும் கொடுப்பனவுகளும்		
மத்திய குளிரூட்டி (மெட்ரொ பெலிடன் இன்ஜினியரிங்)	12,790,683	
நியுட்ரி பார் தயாரிப்பு இயந்திரம் 20% (சேகன் டெக் கம்பனி)	31,023,790	
இணைந்தி திட்டம் 2020-2024 - 20% (KPMG)	632,500	
நிலத்திற்கு டைல் பதிக்க முன்பனம் (அபிரு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவட் லிமிட்ட்)	4,838,174	
மருத்துவக் காப்புறுதி (ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ்)	2,866,068	
ஏனைய	413,439	
	52,564,654	

17 பணமும் பணத்திற்கு சமமானவையும்		
கையிலுள்ள காசு	-	20,000
இலங்கை வங்கி ஜாஎல 71324617	16,524,815.53	29,691,455
இலங்கை வங்கி ஜாஎல 80306903	186,416,124.04	153,631,019
திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடு	92,587,214.29	92,580,625
நிலையான வைப்புக்கள் மீதான முதலீடு	192,353,881.07	59,343,195
	487,882,034.93	335,266,293

17.1 திறைசேரி பிணைமுறிகளில் முதலீடு - மீள் கொள்வனவு ஒப்பந்தம்

C D S கணக்கு	எடுத்த தொகை 31/12/2019 ஆம் திகதிக்கு	எடுத்த தொகை 31/12/2018 ஆம் திகதிக்கு
RET-Y107471000 - 01	71,587,214.29	71,566,000.00
RET-Y107471000 - 02	21,000,000.00	21,014,625.00
	92,587,214.29	92,580,625.00

17.2 நிலையான வைப்புக்களில் முதலீடு

கணக்கிலக்கம்	எடுத்த தொகை 31/12/2019 ஆம் திகதிக்கு	எடுத்த தொகை 31/12/2018 ஆம் திகதிக்கு
83258807	6,038,876.91	5,400,000.00
82420963	4,724,582.92	4,211,218.84
81508819	18,062,416.86	16,443,915.36
81048092	4,955,761.57	4,417,199.88
80940675	12,521,967.72	11,056,818.37
80871912	13,811,638.82	12,166,676.55
80586829	6,416,375.99	5,556,330.37
82932526	50,000.00	50,000.00
85235518	125,772,260.27	-
	192,353,881.07	59,302,159.37

* மேற்படி வைப்பக்கள் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

18 வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்

மூலதன ஒதுக்குகள்	129,574,367.55	-
மீள்மதிப்பிடப்பட்ட ஒதுக்குகள்	175,025,632.45	-
	304,600,000.00	-

அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திரிபோசா கம்பனியின் முகாமைத்துவம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட முழுமையாக அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது' இதற்கமைவாக 304,600,000/- ரூபாவைக் கொண்ட வெளிப்படுத்தப்பட்ட மூலதனத்துடன் 2010 செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது தாபிக்கப்பட்டது'

19 பிற்படுத்தப்பட்ட பொறுப்புக்கள்

ஆண்டின் தொடக்கத்தில் மீதி	390,085,607.56	375,554,449
சுகாதார அமைச்சின் மூலதன நன்கொடை	37,125,391.42	47,609,531
வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்	(129,574,367.55)	-
மூலதனக் கொடை முற்பனம் MOH	12,790,683.45	23,301,129
கழிக்குக: ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு கட்டணம்	(59,864,539.38)	(56,379,502)
ஆண்டிறுதியில் மீதி	250,562,775.50	390,085,608

20 ஒதுக்கங்களின் மீள் பெறுமதியிடல்

ஆண்டின் தொடக்கத்தில் மீதி	306,378,657.65	306,378,658
வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்	(175,025,632.45)	-
ஆண்டில் மீள் பெறுமதியிடல் இலாபம் / நட்டம்	* (176,322.09)	-
ஆண்டிறுதியில் மீதி	131,176,703.11	306,378,658

21 ஓய்வூதிய நலன்கள்

ஆண்டின் தொடக்கத்தில் மீதி	44,898,532.10	42,956,779
கழிக்குக: ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்	(6,416,583.50)	(3,721,918)
2019 ஆண்டிற்கான நிதி ஏற்பாடு	14,827,855.23	5,663,671
ஆண்டிறுதியில் மீதி	53,309,803.83	44,898,532

கழிவு வீதம்	12%	12%
எதிர்கால சம்பளவேற்ற வீதம்	10%	10%
பதவியணி சுழற்சி	2%	2%
ஓய்வுபெறும் வயது	55 Year	55 Year

	31/12/2019 ரூபா சதம்	31/12/2018 ரூபா
22 மருத்துவ நிதியம்		
ஆண்டின் தொடக்கத்தில் மீதி	209,446.78	176,422
ஆண்டில் பங்களிப்பு	208,740.00	231,068
ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவு	(171,350.21)	(198,044)
ஆண்டிறுதியில் மீதி	246,836.57	209,447
23 வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்		
கடன் தருநர்	69,466,431.65	133,075,718
சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு	401,669.82	-
திரணட செலவினம	-	52,133
சுகாதார அமைச்சு - முன் பணம்	-	9,776
மீண்டும் செலுத்தப்படும் வைப்பு	57,203,237.50	54,243,238
சுகாதார அமைச்சு	57,947,330.61	2,358,591
	185,018,669.58	189,739,456
24 முன்னைய ஆண்டு செம்மையாக்கல்		
செலவுக் கணக்குகளுக்கான செம்மையாக்கல்	82,932.81	-
	82,932.81	-

25 மூலதன கொடை சம்பந்தமான பெறுமானத் தேய்வு.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் சம்பந்தமான பெறுமானத்தேய்வு" இந்த ஆண்டின் மொத்த பெறுமானத்தேய்வுக் கட்டணத்தை குறைத்துக் கொண்டு உரிய மூலதனக் கொடை கணக்கிற்கு அனுவிடப்பட்டுள்ளது

26 பொறுப்புகளும் எதிர்பார்க்கப்படாதவைகளும்

அறிக்கையிடப்பட்ட திகதியில் எவ்வித வெளித்தெறியும் பொறுப்புகளோ அல்லது எதிர்பார்க்காத நிகழ்வுகளோ நடைபெறவில்லை

27 தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள்

பிரதான முகாமையாளர்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியின் பிரதான முகாமையாளர்கள் அதன் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் ஆவர். 2019 ஆம் ஆண்டு கலந்துகொள்ளும் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவாக பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு முறையே ரூ' 525,000 மற்றும் ரூ' 138,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

28 நிதி அபாய முகாமைத்துவம்

கம்பனிகளின் நடவடிக்கைகள் பின்வரும் பல்வேறுபட்ட நிதி அபாயங்களுக்கு உட்படக்கூடியன

(அ) சந்தை அபாயம் (சந்தை அபாயம் மற்றும் அன்னியச் செலாவணி அபாயம் உட்பட)

(i) **அன்னியச் செலாவணி ஆபத்து**

கம்பனியானது அன்னியச் செலாவணி ஏற்றஇறக்கங்களுக்கு உட்படக்கூடியது. பிரதானமாக ஐக்கிய அமெரிக்க டாலருக்கு ஒப்பீட்டளவில் இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றஇறக்கத்திற்கு உள்ளாகின்றது. கம்பனியின் செயற்பாட்டு பண அலகு இலங்கை ரூபாவாகும். அதன் மூலமே அதிகமான கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றன. ஏனைய அனைத்து நிதி அலகுகள் நிதி அறிக்கையிடும் செயற்பாட்டுக்காக வெளிநாட்டுப் பணமாக கருதப்படும்.

(ii) **வட்டி வீத அபாயம்**

சபையின் வட்டி வீத அபாயம் என்பது சந்தை வட்டி விகிதங்களின் மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிகளின் சாதாரணப் பெறுமதிக்கு அல்லது எதிர்கால நிதிப் பாய்ச்சல் ஏற்றஇறக்கங்கள் நிகழுவதற்குரிய அபாயமாகும். கம்பனி தனது வட்டி வீத அபாயத்தை முகாமை செய்வது நிதிப் பாய்ச்சலை அவதானித்தல் மற்றும் முகாமை செய்வதற்காக கடன் பெறுவதற்கு சாதகமான வீத்தை கலந்துரையாடுவதன் மூலமாகும்.

(ஆ) கடன் அபாயம்

கம்பனி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரம் வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதியையும் வழங்குகின்றது. எனவே, வியாபாரக் கடன்களை செலுத்தாமை, வர்த்தகத்தின் மூலம் கிடைக்க வேண்டிய நிதி தொடர்பான பிரதான அபாயமாகும்.

கடன் அபாயத்திற்கு உட்படுதல்

சாதாரணமாக கடன் அபாயத்திற்கு உட்படக்கூடிய நிதிச் சொத்துக்களின் உச்ச அபாயத்திற்கு உட்படுகின்றது. அவற்றின் காவும் பணத்திற்கு சமனாகும். பின்வரும் அட்டவணை மூலம் அபாய இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

	12/31/2019	12/31/2018
வர்த்தக மற்றும் வேறு செலுத்த வேண்டியவை	159,361,639.44	65,786,086.88
தொடர்புடைய தரப்பினரிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம்	27,625,102.35	146,994,281.36
காசும் சாசுக்க சமனானவையும்	487,882,034.93	335,266,293.23
மொத்தக் கடன் அபாயத்திற்க உட்படல்	**674,868,776.72**	**548,046,661.47**

(இ) திரவத்தன்மை அபாயம்

காசு அல்லது வேறு நிதிச் சொத்துக்கள் வழங்குவதன் மூலம் கழிப்பனவு செய்யப்படும் நிதிப் பொறுப்புக்களுடன் தொடர்புடைய கடப்பாடுகளை தீர்க்கும் போது கம்பனியினால் முகம் கொடுக்க நேரிடும் ஆபத்து இதுவாகும்.

கம்பனியின் மொத்த அபாய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், சந்தை எதிர்வுகூற முடியாது என்ற விடயம் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. அதன் மூலம் கம்பனியின் நிதிச் செயற்பாட்டுக்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கத்தைக் குறைத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படுகின்றது.

எச்எஸ்எம்/எப்/எஸ்எல்டிசி /06/2019/02

தவிசாளர்

ஸ்ரீ லங்கா திரிபோசா லிமிட்டட்

இலங்கை திரிபோஷா கம்பனியின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கா திரிபோசா லிமிட்டட்டின் (கம்பனியின்) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 50(அ) பந்தியின் பிரகாரம் கம்பனியால் பிஸ்கட்டுகளை உற்பத்தி செய்வதற்கான இயந்திரமொன்றை இறக்குமதி செய்வதற்கு பிணையொன்றாக ரூபா 125 மில்லியன் தொகையான நிலையான வைப்பொன்றை பேணுவதன் மூலம் நாணயக்கடிதமொன்றை திறந்தமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 88 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் செலுத்தப்பட வேண்டிய தொகையாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 12.35 மில்லியன் வருமான வரி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனிச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் நடைமுறையல்லாச் சொத்துக்களை பெறுமதியிடுவதற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக கணிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2.36 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவை அமைச்சிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 27.62 மில்லியன் என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கம்பனிக்கு அமைச்சிடமிருந்து செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 18.33 மில்லியன் மாத்திரமே என உறுதிப்படுத்தப்பட்டிருந்ததால் உரிய மீதிகளிற்கு இடையே ரூபா 9.28 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

2. வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் 163(1) பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேதவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படக்கூடிய தாக்கம் தவிர்ந்த கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, எனது விசாரணையின் போது தெரியவந்த விடயங்களுக்கு அமைய கம்பனி உரிய முறையில் நிதி அறிக்கைகளைப் பேணிவரவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

- கம்பனியின் நிதி அறிக்கைகள் 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் 151 பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவானதாகும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எடுக்கப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை அளவிலான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் கூற்றுக்களை குறிப்பிடுவதற்கு ஏதும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஆளுகை சபையின் எவரேனும் அங்கத்தவருக்கு கம்பனி தொடர்பில் ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடி அல்லது வேறு வகையில் சாதாரண வியாபார நிலமைக்கு அப்பால் தொடர்பு உள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படவில்லை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	**விபரம்**
(அ) 2006 ஆம் ஆண்டின் 10 இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 3 (அ) பந்தி	கம்பனியால் உழைக்கப்பட்ட வரிவிதிக்கத்தக்க வருமானம் மீதான வருமான வரிப் பொறுப்பை கணிப்பீடு செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
(i) 7.2 ஆம் பந்தி	கம்பனியின் நிர்வாக ரீதியான அமைப்புக்களின் பிரதான அம்சங்களை மேவுகை செய்து செயற்பாட்டுக் கைநூல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) 8.2.2 ஆம் பந்தி	மேலதிக நிதிகளை முதலீடு செய்வதற்காக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஒருமைப்பாடு பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனியானது ரூபா 192.30 மில்லியன் தொகையொன்றை அத்தகைய ஒருமைப்பாட்டை பெற்றுக்கொள்ளாமல் அரச வங்கியொன்றில் முதலீடு செய்திருந்தது.
(iii)9.12 ஆம் பந்தி	பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மருத்துவ நிதியமொன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் மீதி ரூபா 246,837 தொகையாக காணப்பட்டது.

(இ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் மற்றும் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டல் பெறுகைக் கால அட்டவணை என்பன முறையாகத் மற்றும் பெறுகை கைநூலின் 4.2.1 ஆம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
பிரிவு

2018 இல 19 கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த கம்பனியின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பணிகளுக்கு அமையுறாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கர்ப்பமாகவுள்ள அல்லது பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பிறந்த குழந்தைகளிற்கிடையே கட்டணமின்றி பகிர்ந்தளிக்கும் நோக்கத்துடன் 12,239 மெட்ரிக் தொண்கள், 11,913 மெட்ரிக் தொண்கள் மற்றும் 11,712 மெட்ரிக் தொண்களையுடைய திரிபோசா முறையே 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது திரிபோசா உற்பத்தி 2018 ஆம் ஆண்டில் 2.66 சதவீதத்தாலும் 2019 ஆம் ஆண்டில் 1.68 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது. எனினும் குறிப்பிட்ட 03 ஆண்டுகளாக வர்த்தக அடிப்படையில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட "சுபோச" இல் முறையே 1,230 மெற்றிக் தொண்கள், 2,610 மெற்றிக் தொண்கள் மற்றும் 3,717 மெற்றிக் தொண்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. இதனால் "சுபோச" இன் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே 112.19 சதவீதம் மற்றும் 42.41 சதவீதத்தால் அதிகரித்திருந்ததால் சமூக நலன் நோக்கமானது வர்த்தக நோக்கத்தால் மறைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

- 2018 இல 19 கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுக்கு அமைய கம்பனியின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுள்ள வகையிலும் காலப்பகுதியில் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைய கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தவில்லை.

03. வேறு கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் மீதான அனைத்து செலவினங்களும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றதால் உற்பத்திச் செயன்முறையின் கழிவுப்பொருளிலிருந்தான விற்பனை வருமானம் அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கழிவுப்பொருள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 23.84 மில்லியன் வருமானம் அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமையஇ 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான 09 ஆண்டுகள் காலப்பகுதியின் போது அரசாங்கத்திற்கு ரூபா 139.91 மில்லியன் கூட்டுமொத்தமான தொகை இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சரவை தீர்மானத்தைப் பின்பற்றி "திரிபோஷா" உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட பால்மா மில்கோ பிறைவேட் லிமிட்டட்டிடமிருந்து மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் குறித்த கம்பனிக்கு ஒரு கிலோகிராம் பால்மாவிற்காக முறையே ரூபா 810, ரூபா 798 மற்றும் ரூபா 800 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் மேற்குறிப்பிட்ட 03 ஆண்டுகள் முழுவதும் மில்கோ பிறைவேட் லிமிட்டட்டானது முகவர் ஒருவர் ஊடாக திரிபோசா கம்பனியின் விற்பனை நிலையங்களுக்கு கிலோகிராம் ஒன்று ரூபா 690 படி பால்மாவை வழங்கியிருந்தது. இதனால் மில்கோ பிறைவேட் லிமிட்டட்டிடமிருந்து கிலோகிராம் ஒன்று ரூபா 690 படி பால்மாவை பெற்றுக்கொள்ளும் சாத்தியத்தன்மை காணப்பட்ட போதிலும் அந்த ஆண்டுகளின் போது ஒரு கிலோகிராம் பால்மாவிற்காக முறையே ரூபா 120, ரூபா 108 மற்றும் ரூபா 110 செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால் உரிய ஆண்டுகளின் போது முறையே ரூபா 77.76 மில்லியன், ரூபா 64.8 மில்லியன் மற்றும் ரூபா 66 மில்லியன் கூட்டுமொத்தமான மேலதிகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2018/2019 காலப்பகுதிக்கு 12,000 மெற்றிக்தொண் சோளத்தை வழங்குவதற்கான பெறுகை 2018 மே 23 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 08 மாத காலப்பகுதியொன்றின் பின்னர் 2019 சனவரி 22 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க ஒரு கிலோகிராம் சோளத்தை ரூபா 55.90 இற்கு வழங்குவதற்கு பெறுகை வழங்கப்பட்டிருந்தது. 2018 மே 23 தொடக்கம் 2019 சனவரி 22 வரையான 08 மாத காலப்பகுதிக்கு 12,000 மெற்றிக்தொண்கள் சோளத்தின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக 3,100 மெற்றிக்தொண்கள் ஒரு கிலோகிராம் ரூபா 59.50 படியும் 2,775 மெற்றிக்தொண்கள் ஒரு கிலோகிராம் ரூபா 59 படியும் 1,250 மெற்றிக்தொண்கள் ஒரு கிலோகிராம் ரூபா 58.50 படியும் 1,875 மெற்றிக்தொண்கள் ஒரு கிலோகிராம் ரூபா 66 படியும் ஆக 9,000 மெற்றிக்தொண் சோளம் போட்டிக் கேள்வியின் கீழ் 04 தடவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதனால் முறையான திட்டமொன்றின் கீழ் பெறுகை மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக சோளத்தின் கொள்வனவிற்காக ரூபா 41.95 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) "திரிபோசா" மற்றும் "சுபோச" உற்பத்தியில் கம்பனியால் பயன்படுத்தப்பட்ட இரண்டு அரைக்கும் இயந்திரங்களின் இயலளவு அன்டர்சன் (Anderson) I இற்கு மணித்தியாலமொன்றிற்கு 1,800 கிலோகிராமும் அன்டர்சன் II இற்கு மணித்தியாலமொன்றிற்கு 2,700 கிலோகிராமும் ஆக காணப்பட்டன. எனினும் போதியளவு எண்ணிக்கையான ஊழியர்கள் காணப்படாதமையால் ஒரு இயந்திரம் மாத்திரம் ஒரு நேரத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதனால் இயந்திரங்கள் குறைப்பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) மூலப்பொருள் இருப்பின் முகாமைத்துவம் தொடர்பாக ஆகக்குறைந்த, ஆகக்கூடிய மற்றும் மீள்கட்டளை மட்ட இருப்புக்களை மதிப்பீடு செய்யத் தவறியதன் காரணமாக மூலப்பொருட்களின் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் மற்றும் வழங்கல் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டுள்ளது.

டபிள்யு.பி.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி